அறைவு 04 இயம் 11 Oct 10 - 16, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS FOR FOREIGN VISA
Contact
0770203201

HELLO MOBILE WORLD


122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# கல்விச் சமூகம் உட்பட மக்கள் ஆதரவளிக்க வேண்டும்



## இரா.ஸ்ரீஞானேஸ்வரன் வேண்டுகோள்

அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பட்டதாரிகள் காலவரையறையின்றித் தொடரும் போராட்டத்திற்குக் கிழக்கு மாகாண கல்விச் சமூகமும் தமிழ் மக்களும் தமது ஆதரவை நல்க வேண்டும் என சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான இரா.ஸ்ரீஞனேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப்பட்டதாரிகள் கைவிடப்பட்ட நிலையில் கடந்த பல நாட்களாகப் போராடிக்கொண்டு இருக்கின்றார்கள். இளம் பெண்களும், இளம் தாய்மார்களும் இப் போராட்டத்தில் பங்குகொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் அம்பாரையில் இருந்து திருகோணமலைக்கு வருகை தந்து 17

## விஞ்ஞான வழிகாட்டிநூல் முரணானதா ???

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட விஞ்ஞான வழிகாட்டி நூல், விஞ்ஞான பாடநூலைப்பிரதி செய்து வெளியிடப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டதைக் கண்டித்து இலங்கை ஆசியரிர் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை கண்டன அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. 17

## ஒக்டோபர் 09 - சேகுவேராவின் நினைவுகள்..




### அம்பாரைப் பட்டதாரிகளின் உண்ணாவிரதம்

## தீர்வு காண்பதற்காக மாவட்ட ஆயர் கடும் முயற்சி

அம்பாறை மாவட்ட தமிழ்ப் - பட்டதாரிகளின் காலவரையற்ற போராட்டம் பத்து நாட்களையும் தாண்டித் தொடர்வதை அடுத்து அப் போராட்டத்தை நிறைவு செய்வதற்கான முழு முயற்சியில் திருகோணமலை மாவட்ட ஆயர் வந்தனைக்குரிய நோயல் இமானுவேல் அடிகளார் முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்

கடந்த நாட்களில் அவர் பல தடவைகள் கிழக்கு மாகாண சபைக்கு முன்பாக பட்டினிப் போரில் குதித்துள்ள அம்பாரை மாவட்டத் தமிழப் பட்டதாரிகளைச் சந்தித்து ஆறதல் கூறியுள்ளதுடன் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கம் அளித்துள்ளார்.

கிழக்கு மாகாண 17

## தமிழ் அகதிகள் கம்போடியாவிலிருந்து பிலிப்பைன்சுக்கு...

அவுஸ்திரேலியாவில் அகதிகளாக அடைக்கலம் கோரியுள்ளவர்களை பிலிப்பைன்சில் தங்க வைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் வரும் புகலிடக் கோரிக்கையாளர்களை பிலிப்பைன்ஸில் தங்கவைப்பதற்கான பேச்சுக்களையே அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

17

### 05 மாதங்கள் தவணை - மார்ச் 31வரை அமைதி

## பாதிக்கப்பட்ட பட்டதாரிகளின் இரண்டாவது அணிக்கு வாக்குறுதிகள் - போராட்டம் தற்காலிக நிறுத்தம்



கிழக்கில் இரண்டாவது பட்டதாரிகள் அணியும் தமக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நடத்திய காலவரையறை - யின்றிய பட்டினிப் போர் தற்காலிக முடிவிற்கு வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கடந்த 07ம் திகதி தொடக்கம் இப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

கிழக்கு மாகாண சபையால் இனவிகிதாசார அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அடுத்து தமிழ்ப் பட்டதாரிகள் பலர் நியமனத்திற்கு தேர்வாகாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக போராட்டம் செய்யும் பட்டதாரிகள் தெரிவித்தனர். 17

திருகோணமலையில் இருந்து 15.10.2015ல் வெளியாகும் பல்சுவை மாத இதழ்
கண்ணாடி
தமிழ் மாத இதழ்
சினிமா, அரசியல், ஆய்வு, வரலாறு கவிதை, சிறுகதை, நாவல்.....


இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு - 076 900 7571 - 026 222 76 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## சாணக்கியத்தின் மறுபெயர் துரோகத்தனமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தொடர்புகள் இருந்ததாகத் தமக்குத் தெரியாது என அக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார்.

கடந்த 17ம் திகதி வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் அதனைத் தெரிவித்திருந்தார்.

"என்னைப் பொறுத்தவரையில் அவ்விதமான சம்பந்தம் இருந்ததாக எனக்குத் தெரியாது. என்னுடைய மாவட்டத்தில் அவ்விதமான சம்பந்தங்கள் எவையும் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் மூலமாகத்தான் இது ஏற்பட்டது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என அவர் தெளிவாக வரையறுத்திருந்தார்.

விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் அத்தியாயங்களில் இருந்து அகற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பல்வேறு நாடுகளின் நடவடிக்கையை மேலும் முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையாக இதனைப் பார்ப்பதா? தமிழ்களின் அரசியல் தலைமைத்துவத்தின் சாணக்கியமாக இதனைப் பார்ப்பதா அல்லது துரோகத்தனமாக இதனைப் பார்ப்பதா? என்பதே தமிழ் மக்களின் மிகப்பெரும் கேள்வியாக எழுந்துள்ளது.

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து தமிழர்களின் அத்தியாயம் வரையப்பட வேண்டு:ம் என்பதில் முதலாளித்துவப் பொருளாதார நாடுகள் மட்டுமல்ல சோசலிசப் பொருளாதார நாடுகளும் முன்நிற்கின்றன.

விடுதலைப் புலிகளைத் தவிர்த்தல் என்பது அவர்களின் பெயரை அப்புறப்படுத்துல் மட்டும் அல்ல. அவர்கள் தாங்கி நின்ற தனித்தமிழீழம் என்ற தேச மீட்புக் கொள்கையை ஒட்டுமொத்தமாக அழிப்பது என்பதையே சுட்டி நிற்கின்றது.

தமிழர்களுக்கு தனித்ததொரு நாடு என்பதை ஆதரிப்பவர்கள் சர்வதேசத்தில் இருந்தாலும் அவர்களால் புலத்தில் மட்டுமே செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன் அச் செயற்பாடுகளைப் பலவீனமானதாக மாற்றக் கூடியது நிலத்தில் வாழும் தமிழ் மக்களின் செயற்பாடுகள் ஆகும்.

ஆகவே தனிநாடு என்ற கொள்கையைத் தாங்கி நின்றது மட்டும் அல்லாமல் அக் கொள்கையின் பால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை ஒன்றிணைத்த சக்தியின் வலுவைச் சிதைப்பதன் ஊடாக அக் கொள்கையை வலுவற்றதாக்கவே தற்போதைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

அதற்காக அக்கொள்கையைக் கொண்டேகிய அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் தவறானதாகச் சித்தரிக்க முனைவது நடைபெறு-கின்றது. அதற்கான முன்நிலை ஆயுதமாக ஊடகங்களை கையகப்படுத்திக்கொண்டுள்ளது அந்த சக்தி.

தற்போது அவ்வமைப்பின் கடும் முயற்சியால் உருவாக்கப்பட்ட தமிழரின் அரசியல் தலைமைத்துவமானது விரும்பியோ விரும்பாமலோ யாரால் உருவாக்கப்பட்டதோ அவ்வாறு உருவாக்கியவர்களின் கொள்கையை முன்னெடுக்க வேண்டிய தேவையைக் கொண்டிருப்பது என்பது பெரும் தடைக்கல்லாகவே அச்சக்திக்கு இருந்தது.

மேலும் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்களிற் பெரும்பாலானோர் அவ்வமைப்பு விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது என்ற ஒரே காரணத்தினாலேயே வாக்களித்திருந்தனர். அவ்வாறு வாக்களித்ததன் அடிநாதமாக விடுதலைப் புலிகளின் கொள்கையைத் தாம் இன்றும் ஆதரப்பதாகவே தமிழ் மக்கள் தமது வாக்கின் ஊடாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் கொள்கையைக் கைவிட்டு சராசரி அரசியல் பண்புகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்நகர வேண்டுமாயின் அவர்களால் உருவாக்கப்பட்டு அரசியல் ரீதியில் விடுதலைப் புலிகளின் கொள்கையைக் காவிச் செல்ல வேண்டிய கடப்பாட்டை உருவாக்கியதில் இருந்து கூட்டமைப்பு வெளியேறவேண்டிய தேவையுள்ளது. அதற்காகவே கூட்டமைப்பைப் புலிகள் உருவாக்கவில்லை என வெளிப்படையாகத் தெரிவிப்பதன் ஊடாகத் தமது கடப்பாட்டில் இருந்து கூட்டமைப்பு வெளிவந்து விடும் என்பது எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிப்படையாக அறிவிப்பதன் ஊடாகத் தமிழ் மக்களுக்கு இனி கிடைக்கவேண்டியதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற மாயையை உருவாக்கி, அதனூடாக சாணக்கியமான அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்தும் நாள் அதிக தொலைவில் இருப்பதாகத் தெரியவில்லை.

உண்மைகளை வெளிச்சொல்ல எவரும் இல்லாத போது ,துரோகத்தனங்கள் சாணக்கியமாக உருவெடுக்கும் என்பது வரலாற்றுப் பதிவுகளே! புரிந்து கொள்வோமா?

## "அம்பாறைப் பட்டதாரிகளின் போராட்டம் நியாயமானது" டெலோ ஆதரவு


நித்தி

அம்பாரை மாவட்ட வேலையற்ற தமிழ் பட்டதாரிகளின் நியாய பூர்வமான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரொலோ )சார்பாக அறிக்கை ஒன்றினை இன்று 07.10.2015 விடுத்துள்ளனர் அந்த இயக்கத்தின நிர்வாக செயலாளர் நித்தி மாஸ்டர் விடுத்துள்ள அறிக்கை இவ்வாறு அமைகிறது.

கடந்த ஏழு நாட்களாக அம்பாரை மாவட்ட வேலையற்ற தமிழ் பட்டதாரிகள் தங்களுக்கு அரச நியமனம் வழங்குவதில் காட்டப்பட்ட பாரபட்சத்தை கண்டித்தும், தமக்கு அரச நியமனம் வழங்குமாறு கோரியும் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபைக்கு முன்பதாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேலையில்லா பட்டதாரிகளை எமது அரசியல்வாதிகளும், அமைச்சர்களும் பார்வையிட்ட போதும் அவர்களுக்கு எந்தவிதமான எழுத்து மூல உத்தரவாதத்தையும் வழங்காமல் வாய்மொழி மூலமான உத்தரவாதத்தை வழங்கி செல்கின்றதை காணக் கூடியதாக உள்ளது.

அம்பாரை மாவட்ட தமிழ்மக்கள் தமிழ் இனம் என்பதால் புறக்கணிக்கப்-படுவதாகும்.

எனவே இவர்களின் இந்த நியாயமான கோரிக்கையை முன்வைத்து நடாத்தும் இந்த உண்ணாவிரத போராட்டத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்து கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (வுநுடுழு) தனது பூரண ஆதரவை நல்குவதுடன், இனிமேலும் எதிர்வரும் சந்ததிகளுக்கும் இவ்வாறான இன ரீதியான பேதம் காட்டப்படாது சம வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என கோரி நிற்கின்றது என அரது அறிக்கை தெரிவிக்கின்றது.

## அன்பு முதியோர் சங்க முதியோர் விழா

சிறீ...

அன்புவழிபுரம் அன்பு முதியோர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோரை கௌரவித்தல் நிகழ்வு இடம் பெற்றது.

கடந்த 6ம் திகதி அன்பு முதியோர் சங்க தலைவர் இராஜேந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

மேலும் சிறப்பு விருந்தினராக கலைமகள் மகா வித்தியாலய அதிபர் க.ரவிதாஸ் அவர்கள் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் த.கலைக்குமார், கிண்ணியா பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் அருந்தவச்-செல்வம் மற்றும் அன்புவழிபுரம் கிராம சேவகர் எஸ்.சிவானந்தம் மற்றும் முன்னால் கிராம சேவகர் அன்டனி அல்பிரட் மாவட்ட முதியோர் சங்க செயலாளர் எஸ்.யோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்நிகழ்வின் போது நடனம் மற்றும் முதியோரை பாதுக்காத்து பராமரிக்க வேண்டியதன் கடமை தொடர்பிலான கருத்தை உள்ளடக்கிய நாடகம் மற்றும் முதியோர்களுக்கான அன்பளிப்பு வழங்களும் கௌரவிப்பு நிகழ்வுகளும் ,டம் பெறுவுள்ளன.

## மேன்காமம் அ.த.கவில் மூவர் புலமைச் சித்தி

அச்சுதன்...

அண்மையில் வெளிவந்த 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மூதூர் - மேன்கமம் அ.த.க வித்தியாலயத்தைச் சேர்ந்த நி.லிதுர்சன் (176), அ.தர்வின் (155) ரா.திதுர்சிகா (151) ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக சித்தியடைந்துள்ள இம் மூன்று மாணவர்களும் அதிபர் நவநாதன் கற்பித்த ஆசிரியர் ச.குபேந்திரராணி மற்றும் பெற்றோருடன் நிற்பதை படத்தில் காணலாம்.



## உவர்மலை விவேகானந்தாவில் 380 சாரணர்கள் இணைவு

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் முன்னூற்று எண்பது சாரணர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 08ம் திகதி பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர்களுடனான கூட்டத்தில் அவர்களின் ஆதரவுடன் இவ்வாறு சாரணர்கள் சேர்க்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் சாரணர்க் இணைக்கப்படுவது மாவட்டச் சாரணர் குழுவின் விருத்திக்குப் பெரும் பங்காற்றும் எனத் தெரிவிக்கப்பட்டள்ளது..

## 2016ன் பாடசாலை நாட்கள் 197

2016ம் ஆண்டுக்கான பாடசாலை நாட்கள் 197 எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது அதன்படி தமிழ் சிங்கள பாடசாலைகளின் 1ம் தவணை 04.01.- 08.04 வரையும், 2ம் தவணை 25.04 - 29.07 வரையும், 3ம் தவணை 31.08 - 02.12 வரையும் நடைபெறும்

முஸ்லிம் பாடசாலைகள் முறையே 1ம் தவணை 04.01-11.04 வரை, 2ம் தவணையின் முதற் கட்டம் 18.04 - 03.06 வரையும் இரண்டாம் கட்டம் 07.07 - 12.08 வரையும், 3ம் தவணை 22.08 - 02.12 வரையும் நடைபெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையை விரட்டியடிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது



போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேச மக்களின் யானை தாக்குதல் பிரச்சினைகளுக்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது. போரதீவுப்பற்று பிரதேசசபையின் மண்டபத்தில் நடைபெற்ற விசேட உயர் கூட்டத்திலேயே இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டது.

போரதீவுப்பற்று பிரதேசத்தில் தொடரும் யானைகளின் தாக்குதலை கட்டுப்படுத்துமாறு கோரி குறித்த பிரதேச மக்கள் பிரதேசசெயலகம் மற்றும் மண்டூர் - மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த போராட்டமானது தொடர்ந்த நிலையில் இது தொடர்பில் ஆராயும் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் கிராமங்களுக்குள் தாக்குதல்களை நடாத்தும் யானைகளை மயக்க ஊசியை செலுத்தி கபரணையில் உள்ள யானை சரணாலயத்திற்கு கொண்டுசெல்வதற்காக அனுராதபுரத்தில் உள்ள வனஜீவராசிகள் திணைக்கள ஊழியர்களை வரவழைப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டதுடன் யானையின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் யானைகள் மறைந்திருக்கும் பற்றைக்காடுகளை துப்புரவுசெய்யும் நடவடிக்கையினையும் முன்னெடுக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதையடுத்து பொதுமக்களின் மறியல் போராட்டம் முடிவுக்கு வந்தது.

மலைமுரசு MALAIMURASU

## மட்டக்களப்பு செய்திகள்

# கடதாசி ஆலை ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

தங்களது சம்பள நிலுவையை வழங்கக் கோரி கடந்த 18.09.2015ஆம் திகதி தொடக்கம் கடதாசி ஆலைக்கு முன்பாக அமைதியான முறையில் நடத்தி வந்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்து 19 நாட்கள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் மேலதிக செயலாளர் குசும் பியரத்ன அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் கடதாசி ஆலையின் பொது முகாமையாளர் அனுர ரணவீர ஆகியோர் வருகை தந்து, சம்பள நிலுவையை ஒரு வார காலத்துக்குள் வழங்கப்படும் என்றும் அதற்கு தான் முன் நிற்பதாகவும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் மேலதிக செயலாளர் குசும் பியரத்ன வழங்கிய உறுதிமொழியை அடுத்து இந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

அமைச்சின் செயலாளர் தெரிவித்தது போல் ஒரு வாரத்துக்குள் சம்பளம் வழங்கப்படாமல் இருக்குமேயானால் எமது போராட்டம் தொடரும் என்று ஆலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

# ஆழ்கடலுக்குச் சென்றவர் சடலமாக

**வா**ழைச்சேனை துறைமுகப் பகுதியில் இருந்து ஆழ் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற ஓட்டமாவடி பிரதேசத்தினை சேர்ந்த மீனவரின் சடலத்தினை சக மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஓட்டமாவடியினைச் சேர்ந்த முகமட்தம்பி பதூர்தீன் (42) என்பவரே இவ்வாறு சடலமாக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

மாரடைப்பு காரணமாக கடலில் மிதந்த வலையின் மீது தவறி விழுந்த போது அவரினை மீட்ட போதிலும் அவரின் உயிரினை காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாக அவருடன் தொழிலுக்கு சென்ற சக மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்ததுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

# கிடைக்கும் வளங்களிலிருந்து இயந்திரங்கள் உருவாக்கம்

கிடைக்கும் வளங்களைக் கொண்டு அதிகளவான கண்டுபிடிப்புக்களை செய்து சாதனை படைத்துள்ளார் மட்டக்களப்பு இளைஞர் தங்கவேல் சக்திக்குமார். "சஹசக் நிமெவும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான தேசிய கண்காட்சி 2015 செப்டெம்பர் மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளில் இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளன நிலையத்தில் இடம்பெற்ற போது இவரால் கண்டுபிடிக்கப்பட்ட சந்தணக்குச்சி தயாரிக்கும் இயந்திரம், கற்பூரம் தயாரிக்கும் இயந்திரம், பைட்ஸ் தயாரிக்கும் இயந்திரம். டோனர் சிப்பை மீள தயாரிக்கும் இயந்திரம், மூலிகை அரிசி, மூலிகை தேயிலை, மூலிகை பொரி, மீன் இரை, போத்தல்களில் அச்சுப்பதிக்கும் இயந்திரம், ஆகிய இவரது கண்டுபிடிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.



இக் கண்காட்சியில் அதிகூடிய எண்ணிக்-கையிலான கண்டுபிடிப்-புக்களை காட்சிப்படுத்திய ஒருவராக இவர் திகழ்கிறார்.

# சட்டவிரோதமான மதுபானக் குடுவைகள் கைப்பற்றப்பட்டன

சட்ட விரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை மதுபான போத்தல்கள் கடந்த வியாழக்கிழமை மாலை களுவாஞ்சிக்குடி காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனைக்கு கார் ஒன்றில் சட்ட விரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட காற்போத்தல், அரைப்போத்தல், முழுப்போத்தல் உள்ளடங்களாக 258 மதுபானப் போத்தல்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி மேலும் தெரிய வந்துள்ளது. கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த மதுபானப்போத்தலும் அவற்றைக் கொண்டுசென்ற காரும் கைப்பற்றப் பட்டுள்ளதோடு இவற்றைக்கொண்டு சென்ற சந்தேகநபரையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.



# இரு இந்தியர்கள் கைது

இந்தியாவில் இருந்து சுற்றுலா வீசா அனுமதியில் இலங்கை வந்துள்ள இந்தியர்கள் இருவர் குடிவரவு சட்ட விதிகளை மீறி வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 07ந் திகதி கைது செய்யப்பட்டதாக வாகரை காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் எனவும் காவற்துறையினர் கூறியுள்ளனர்.

# மாற்றம் என்பது உள்ளத்திலிருந்து வரவேண்டும்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது அதன் ஆசியர்களுக்கு கிடைத்த பெரிய பாக்கியமாகும் என காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் தெரிவித்தார். கிழக்கிலங்கை ஹாஹிரா விசேட தேவையுடையோர் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை கலாசார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது விசேட தேவையுடைய மாணவர்களை சிறந்த கல்வியலாளர்களாகவும் சிறந்த ஆற்றலுடையவர்களாகவும் மாற்றுவதென்பது சவாலுக்குரியதாக இருந்தாலும், அந்த சவாலை ஏற்றுக் கொண்டு அவர்களை சமூகத்தில் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அந்த மாற்றம் என்பது உள்ளத்திலிருந்தே வரவேண்டும். தரிசனம் பாடசாலையில் கற்ற ஒரு விசேட தேவையுடைய மாணவர் பட்டதாரியாகியுள்ளார். அதுபோல ஏனையோரையும் சிறந்தவர்களாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கொலைச் சந்தேக நபர்கள் கைது

## (2005ல் இடம்பெற்ற ஜோசப் பரராஜசிங்கத்தின்)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள பிரதீப் மாஸ்டர் உட்பட இருவரையும் விளக்கமறியல் வைக்க கொழும்பு முதன்மை நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரதீப் மாஸ்டர் என்ற எட்வின் சில்வா [illegible] மாமா என்று அழைக்கப்படும் கே.ரெங்கசாமி ஆகியோரை 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிவான் சிஐடிக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புடைய மேலும் இருவர் சுவிட்ஸர்லாந்தில் இருப்பதால் அவர்களை கைதுசெய்ய இன்டர்போலின் உதவியை நாடவுள்ள-தாக சிஐடி நீதிமன்றத்தில் அறிவித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005ம் ஆண்டு டிசம்பர் 25ம் திகதியன்று ஜோசப் பரராஜசிங்கம் புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும்

**த வோல் ஸ்ரீட் ஜேனல்**

மறுசீரமைப்பு மற்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அர்த்தமுள்ள நீதிச் செயற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச நிர்வாகம் குறிப்பாக ஒபாமா நிர்வாகம் ஸ்ரீலங்கா மீது காத்திரமான இராஜதந்திர அழுத்தங்களை கட்டாயம் பேணவேண்டும் என த வோல் ஸ்ரிட் ஜேனல் (the world street journal) சுட்டிக்காட்டியுள்ளது.

நீதி, பொறுப்புகூறல் மற்றும்




நல்லிணக்கத்தை இலங்கை எவ்வாறு துல்லியமாக எட்ட வேண்டும் என்பதற்கு தெளிவான வரையறைகள் மற்றும் மேலும் திட்டவட்டமாக நடவடிக்கை அவசியம் என மேலும் கூறியுள்ளது.

நம்பகமான நீதிச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களை மையமாக கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், சமூகத்துடன் ஸ்ரீலங்கா எவ்வாறு கலந்துரையாடல்களை மேற்கொள்ளது என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என சுட்டிக்காட்டியதுடன் வாக்குமூலம் மற்றும் தகவல்களை வழங்குவதற்கென தெரிவுசெய்யப்படுவோரின் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீலங்கா விளக்கமளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 73 அகதிகள் தமிழகம் இருந்து தாயகம் நோக்கி

தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களில் இருந்து 73 ஈழ அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர். விமானத்தின் மூலம் அவர்கள் சிறிலங்காவைச் சென்றடைந்தனர். அவர்களுக்கான உதவிகளை ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை வழங்கியுள்ளது.

கடந்த 2002ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரையான காலப்பகுதி வரையில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவையின் உதவியால், 12500 அகதிகள் தாயகம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ்வருடத்தினுள் 315 பேர் வரையில் நாடு திரும்பியுள்ளனர்.

## மீண்டும் விசாரணையில் கோத்தபாய

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் பாரிய ஊழல் மோசடி தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டது.

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்களை தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த வியாழக்கிழமை இந்த விசாரணைகள் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் உள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றன.

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

**- சம்பந்தன் -**

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா நாடாளுமன்றத்தில் குற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து சீனாவுடன் உடன்பாடு ஒன்று செய்து கொள்வது தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் கைதிகள் விவகாரத்தை அரசாங்கம் சட்டரீதியான விடயமாக பார்க்கக்கூடாது. இதனை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



## இலங்கை – சீனா சந்திப்பு

சீன உதவி வெளிவிவகார அமைச்சரின் தலைமையிலான சீன பிரதிநிதிகள் குழு கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த போது இலங்கைக்கு சகல உதவிகளையும் வழங்க சீனா தயார் என தெரிவித்துள்ளது.

இதன்போது, இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நீண்டகால நட்புறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, சீனாவுக்கு தான் மேற்கொண்ட விஜயத்தின்போது சீன ஜனாதிபதியும் அரசாங்கமும் தனக்கு வழங்கிய முழுமையான ஒத்துழைப்புகளுக்கு ஜனாதிபதி திருப்தி வெளியிட்டார்.

இரண்டு நாடுகளுக்கிடையேயும் இளம் அரசியல்வாதிகளைப் பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.



## சக பெண்ணினால் தாக்கப்பட்ட பணிப்பெண்

இலங்கைப் பணிப் பெண் ஒருவர் குவைத் நாட்டில் சக பெண்களால் மோசமான முறையில் தாக்கப்படும் காணொலி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந் நாட்டின் இலங்கை நிறுவனம் ஒன்றில் வைத்தே அப்பெண் தாக்கப்படுகின்றார்.

இது தொடர்பாக அப் பெண்ணின் கணவர், தனது மனைவி கடந்த மே மாதமே தன்னுடன் கடைசியாக கதைத்ததாக தெரிவித்தார்.

இந் நிலையில் தனது மனைவி சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பெண் ஒருவர் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

## “பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் புதிய பல தகவல்கள் அம்பலமாகியுள்ளன”

கடத்தப்பட்டு காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட, கிரித்தலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு, அங்கிருந்து வெலிக்கந்த முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதன் பின்னர் வெலிக்கந்த முகாமில் அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்து தற்போது விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் வெலிக்கந்த முகாமை சோதனைக்கு உட்படுத்த மன்றின் அனுமதியை ட மா அதிபரின் ஆலோசனை-ன் பெற்றுக்கொள்ள உள்ள-கவும் காவல்துறை தகவல்கள் ரிவிக்கின்றன.

டகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பில் அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறையிட்டதை தொடர்ந்து அது தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது விவகாரத்தில் தற்போது கைதாகியுள்ள 11 பேரில் 7 பேர் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் உதவி காவல் அத்தியட்சர் சானி அபேசேகர உள்ளடங்கிய குழுவினரால் கடந்த செவ்வாயன்று கிரித்தலை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இது தொடர்பில் விசாரணைகளிலிருந்து மேலும் பல தகவல்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## பாதிக்கப்பட்டோர் அதிகரிப்பு




இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 2,245 ஆக உயர்ந்துள்ளது.

15 தொடக்கம் 25 வயது பிரிவைச் சேர்ந்தவர்களே எச்.ஐ.வி தொற்றுக்கு அதிகளவில் இலக்காவதாக பாலியல் நோய்கள மற்றும் எய்ட்ஸ் தொற்று தேசிய ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளரான வைத்தியர் சிசிர லியனகே குறிப்பிடுகின்றார்.

எப்படியிருப்பினும் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் ஏறத்தாள 9 இலட்சம் பேர் வரையில் எச்.ஐ.வி தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் அதிலும் அதிகமானோர் தாய்மார்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆசிரியர்கள் மாணவர் முன் கட்டிப்புரண்டு சண்டை

கல்முனை கல்வி வலயத்தில் சாய்ந்தமருது கோட்டத்தில் உள்ள பாடசாலையொன்றில் கடந்த வியாழக்கிழமை ஆசிரியர் தினத்தன்று வருகை தராத மாணவரை தண்டித்து ஆசிரியர் தினச் செலவுக்கான பணத்தையும் கோரியுள்ளார். அதே பாடசாலையில் கற்பிக்கும் அம்மாணவனின் தந்தை தனது மகன் தாக்கப்பட்டதை அறிந்து ஆசிரியரிடம் விசாரித்த போது இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறி மாணவர்களுக்கு முன்னிலையில் அவர்கள் இருவரும் கட்டிப்புரண்டு சண்டையிட்டுள்ளனர்.

## பிரபல போதைப்பொருள் வர்த்தகர் கைது



கொழும்பின் பிரபல போதைப் பொருள் வர்த்தகர் குடு சம்பத் இன்று காலை காவல்துறையினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெலிக்கடைப் பிரதேசத்தில் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு சோதனையொன்றின் போது அவர் 20 கிராம் எடைகொண்ட போதைப் பொருளுடன் காவல்துறையினரிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

வெலேசுதா, குடு சித்திக் போன்றவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த இவர் நீண்டகாலமாக காவல்துறையினரால் தேடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலைமுரசு
MALAIMURASU
உலகச் செய்திகள்

# மன்னிப்பு கோரிய

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா

எல்லைகளற்ற வைத்தியர்கள் அமைப்பு, ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் பகுதியில் நடாத்திவந்த வைத்தியசாலை மீது, அமெரிக்கப் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, மன்னிப்புக் கோரியுள்ளார்.

எல்லைகளற்ற வைத்தியர்கள் அமைப்பினால் நடாத்தப்பட்ட வைத்தியசாலை மீதான அமெரிக்க விமானத் தாக்குதலில், வைத்தியப் பணியாளர்கள் உட்பட 22 பேர் மரணமடைந்திருந்த நிலையில், அது தொடர்பான கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டதோடு, இது தொடர்பாக சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென எல்லைகளற்ற வைத்தியர்கள் அமைப்புக் கோரி வருவதோடு, இதுவொரு போர்க் குற்றமாக அமைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் செய்ட் ராட் அல் ஹூஸைன் தெரிவித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பிரியும் அபாயம்

## பிரான்ஸ் ஜனாதிபதி பகிரங்க எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் சவாலாக விளங்கி வரும் முக்கிய பிரச்சனைகளை உடனடியாக தீர்க்காவிட்டால் கூட்டணி நாடுகள் பிரிந்து செல்வதை யாராலும் தடுக்க முடியாது என பிரான்ஸ் ஜனாதிபதி பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடந்த முக்கிய ஆலோசனை கூட்டத்தில் பேசிய பிரான்ஸ் அதிபர் பிராங்கோயிஸ் ஹோலண்டே அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பது, யூரோ நாணயத்தின் மதிப்பை சீராக வைத்திருப்பது உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகள் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் சவாலாக விளங்கி வருகிறது.

அகதிகள் மற்றும் ஒவ்வொரு நாட்டின் எல்லைகளை திறந்து விடுவது தொடர்பான விவகாரங்களில் கூட்டணி நாடுகள் மிகவும் தாமதமாகவே செயல்பட்டு வருகிறது.

இவ்வாறே செல்லுமெனில், பாரம்பரியமிக்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பிரிந்து சென்று அழிவை சந்திப்பதை யாராலும் தடுக்க முடியாது என பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கண்ணாடி பாலத்தில் கீறல்

உலகிலேயே நீளமான, உயரமான சீனாவின் யூன்டாய் மலையின் மேல் ஹெனான் என்ற பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3,500 அடி உயரத்தில் யு வடிவில் கட்டப்பட்டுள்ள கண்ணாடி பாலத்தில் சிறு கீறல் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் கண்ணாடி பாலத்தைக் கடக்க வந்த சுற்றுலாப் பயணிகள் பீதி அடைந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.


இந்த நிலையில், அதிகமான சுற்றுலாப் பயணிகளினால் கண்ணாடி பாதை அடுக்குகளில் கீறல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, பயணிகளுக்கு தடை விதிக்கபட்டு உள்ளதாகவும் தற்போது கண்ணாடி பாலம் மூடப்பட்டு பாலத்தை பராமரிக்கும் குழுவினர், கீறலை சரி செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும் சீன பத்திரிகை தெரிவித்து உள்ளது.

# 11வயதில் சிறுவனின் ஆத்திரம்

அமெரிக்காவில் நாய்குட்டியை பார்க்க அனுமதிக்காததால், தனது 8 வயது தோழியை சிறுவன் ஒருவன் சுட்டுக் கொன்ற சம்பவம் நடந்துள்ளது. மெக்கல்யா வளர்த்து வந்த நாய்குட்டியை பார்க்க வேண்டுமென்று அந்த சிறுவன் கேட்டுள்ளான். அதற்கு மெக்கல்யா மறுப்பு தெரிவித்ததாகத் தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த அந்த மாணவன் வீட்டுக்குள் சென்று, தனது தந்தையின் பிஸ்டலால், மெக்கல்யாவை சுட்டுள்ளான். மார்பு பகுதியில் குண்டு பாய்ந்த நிலையில் சிறுமியின் தந்தை, வைத்தியசாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனளிக்காமல் சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார்.

# கனடாவும் இணைய வேண்டும்

## ரஷ்யா வலியுறுத்தல்



சிரியாவில் ஐ எஸ் ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் தம்முடன் கனடாவும் இணைந்துகொள்ள வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

ஐ எஸ் ஆயுததாரிகளை தோற்கடிப்பது குறித்தே தமது நாடு கவனம் செலுத்துவதாகவும் அசாத்தை பலப்படுத்தும் வகையில் செயற்படவில்லை எனவும் கனடாவிற்கான ரஷ்ய தூதுவர் அலெக்சாண்டர் டார்ச்சீவ் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் பங்குபற்றுதலுடன் முன்னெடுக்கப்படும் அமெரிக்கா தலைமையிலான கூட்டு நாடுகளின் விமானத் தாக்குதல்கள் தோல்வி அடைந்த ஒன்றென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரஷ்யா, சிரியாவுக்கே ஆதரவு

சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் மீது கஸ்பியன் கடலில் உள்ள ரஷ்ய போர்க்கப்பல்களிருந்து ஏவப்பட்ட ரொக்கெட்கள் இலக்குகளை தாக்கியுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மற்றும் பாதுகாப்பமைச்சர் செர்ஜி ஷொய்குவும் இணைந்த தொலைக்காட்சி சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

தரையிலுள்ள சிரிய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவாகவே ரஷ்யாவின் நடவடிக்கைகள் இருக்கும் என ஷொய்குவுடனான சந்திப்பில் தெரிவித்த புட்டின், சிரியா இராணுவத்தால் முன்னெடுக்கப்படும் வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தமது விமானப்படை ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி மீது வழக்குத் தாக்கல்

மியான்மாரில் றோஹிஞ்சா முஸ்லிம்கள் மீது இனவழிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்குக் காரணமாக மியான்மாரின் ஜனாதிபதி தெய்ன் செய்ன் காரணமாக இருந்துள்ளார் எனத் தெரிவித்து, அமெரிக்காவின் நியூ யோர்க்கில் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு வெளியே ஏற்படுத்தப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அமெரிக்க ஏலியன் தீங்குச் சட்ட நீதிமன்றத்திலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# இராணுவ வீரர் நெய்லுக்கு கொலை மிரட்டல்

அல் கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவரான ஒசாமா பின் லேடனை சுட்டுக்கொன்ற அமெரிக்காவின் நேவி சீல் படையின் வீரர் ரோப் ஓநெய்லுக்கு ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஒசாமா பின் லேடனை நேருக்கு நேர் நின்று சுட்டுக் கொன்ற வீரர்களில் ஒருவரான நெய்ல் தற்போது இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பூட் என்ற பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் இவருக்கு சமூக வலைத்தளங்கள் மூலமாக ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதனால் இவரை வேறு பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்த அமெரிக்க பாதுகாப்புத் துறை நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.



## படையை அனுப்பவுள்ள பிரித்தானியா

பால்டிக் பிராந்தியத்திற்கு நீண்டகால அடிப்படையில் தமது நாட்டுப் படையினரை அனுப்புவது தொடர்பான அறிவிப்பை பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் மைக்கல் போலோன் வெளியிடவுள்ளார். சுமார் 100 பிரித்தானியப் படையினரை அனுப்புவது குறித்து பிரசல்ஸில் நடைபெறும் நேட்டோ அமைப்பின் சந்திப்பில் அவர் தகவல் வெளியிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடவியல் அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

தாத்ரி மாவட்டத்தில் பிசாதா கிராமத்தில் பசு மாட்டை வெட்டி சாப்பிட்டதாக முகம்மது இக்லாக் என்ற இஸ்லாமியர் கடந்த மாதம் அடித்து கொல்லப்பட்டார். இதையடுத்து, இறைச்சி மாதிரி கடந்த மாதம் 28ம் திகதி குளிர் சாதன பெட்டியில் இருந்த இறைச்சியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். அந்த இறைச்சியை பரிசோதனைக்கு உட்படுத்திய தடயவியல் நிபுணர்கள் கைப்பற்றப்பட்ட இறைச்சி மாட்டு இறைச்சி அல்ல. அது மட்டன் என்று குறிப்பிட்டுள்ளனர். நடந்த தவறு தெரிய வந்துள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## தமிழ் பிரதிநிதிகளே பொய் கூறும் போது இராணுவ அதிகாரிகள்!!

- ஹர்மன் குமார -

வடக்கில் ஒரு சிறு துண்டு நிலத்தையும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கவில்லையெனவும், இராணுவம் நிலைகொண்டுள்ள காணிகள் அனைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகள் என இராணுவப் பேச்சாளர், தென்னிலங்கை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பொறுப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே ஜெனீவா சென்று பொய் கூறும் போது, அந்த இராணுவ ஊடக பேச்சாளர் பொய் கூறியது பெரிய விடயமில்லை என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல, யாழிலுள்ள விருந்தினர் விடுதியில், நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கூறுகையில், முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் மாத்திரமல்ல தற்போதைய நல்லாட்சி எனச் சொல்லப்படும் ஆட்சிக்காலத்திலும் எமது நிலங்களை விடுவிப்பதற்காகவும், கடல் வளத்துக்காகவும் போரடவேண்டிய நிலையிலுள்ளோம்.

## ஈழத்தமிழர் நிசாந்தன் கனடிய காவல்மா அதிபரானார்



ஹால்ரன் பிரதேச காவல்துறை சேவையில் கான்ஸ்டபிள் பதவியில் இணைந்து தனது திறமைகளில் சார்ஜன்ட் மற்றும் ஒருங்கிணைப்பாளர், பொறுப்பதிகாரி, பொலிஸ் அத்தியட்சர் போன்ற பதவிநிலைகளை வகித்த நிசாந்தன் துரையப்பா தற்போது துணைப் காவல்மா அதிபராகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றார். இதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தலை ஹால்ரன் பொலிஸ் திணைக்களம் கடந்த வார இறுதியில் வெளியிட்டுள்ளது.

ஹால்ரன் பிரதேசத்திலுள்ள பல்லின சமூகத்தினரிடையே மிகவும் பிரபல்யமான ஒரு அதிகாரியாக இருக்கும் நிசாந் துரையப்பா புதிய குடிவரவாளர்களிற்கான பல திட்டங்களை அப் பிரதேசத்தில் அறிமுகப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது

சட்டக் கல்லூரி அனுமதி - 2016 கல்வியாண்டுக்கான போட்டிப் பரீட்சையில் தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகளில் கணிசமான தொகையினருக்கு அப்பட்டமாக அநீதி இழைக்கப்பட்டு உள்ளது. கடந்த சனிக்கிழமை இப்பரீட்சை கொழும்பில் இடம்பெற்றது. வடக்கு, கிழக்கு அடங்கலாக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் தமிழ் பேசும் பரீட்சார்த்திகள் பரீட்சை எழுத வந்திருந்தனர்.

சட்டக் கல்லூரி அனுமதியில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தமிழ் பேசும் பரீட்சார்த்திகளுக்கு திட்டமிடப்பட்ட புறக்கணிப்பு, அநீதி இடம்பெறுகின்றது என்று பரவலாக விமர்சிக்கப்படுகின்றது. இவை சம்பந்தமாக பரீட்சார்த்திகள் சிலர் மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் கடந்த காலங்களில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

## நினைவு தினத்தை முன்னிட்டு நூல்கள் வழங்கப்பட்டன



சேகுவேராவின் நினைவு-தினத்தை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை ஒரு தொகுதி நூல்கள் யாழ் பொது நூலகத்-திற்கு வழங்கி வைக்கப்பட்டு-ள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் சோசலிச இளைஞர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூல்களை யாழ். பொதுநூலக பிரதான நூலகரான சுகந்தி சதாசிவமூர்த்தியிடம் கையளித்தார்.

## கனடிய உயர்ஸ்தானிகராலயம் விரைவில்

இலங்கையில் கனடிய வெளிநாட்டுப் பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்தும் நோக்குடன், கனடிய உயர்ஸ்தானிகராலயம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு, புதிதாகத் தெரிவாகும் கொன்சவ்வேட்டிவ் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென ஜேசன் கெனி நேற்று அறிவித்தார்.

இலங்கையில் சமாதானம் மற்றும் சமரச புரிந்துணர்வை உறுதி செய்யும் நோக்குடன், புதிதாகத் தெரிவாகும் கொன்சவ்வேட்டிவ் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்றும் தெரிவித்த அவர், யாழ்ப்பாணத்திற்கு கனடிய இராஜாங்கத் தொடர்புகளை உருவாக்குவது, இலங்கையில் ஜனநாயகம் மற்றும் சமூக வளர்ச்சிக்கான கனடாவின் உறுதிப்பாட்டை மேலும் திடமாக்கும் என்றும் குறிப்பிட்டார்.




## இடையூறுகளைத் தடுக்க இரவு நேர ரோந்து

சுன்னாகம் காவல்துறையினர் கடந்த புதன்கிழமை இரவு மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் காவல் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் ஏழாலை பகுதியில் மது போதையில் பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொண்ட நான்கு பேரையும் மற்றும் சந்தேகத்தின் பெயரில் நான்கு பேரையும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவரையும் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய நான்கு பேரையும் கைது செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சுன்னாகம் பிரிவினுள் கடந்த சில நாள்களாக இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ள நிலையில் இத்தகையவர்களும் கைது செய்யப்படுவதால் பொதுமக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்கள் ஓரளவுக்குக் குறைவடைந்து வருவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

## உயர் பாதுகாப்பு வலய முள்வேலியை தாண்டுவோம்

எம்மை விரைவில் மீள்குடியேற்றம் செய்யாவிடின். ஒரு கையில் எமது காணிக்கான உறுதியுடனும், மறுகையில் வெள்ளைக் கொடியையும் தாங்கி உயர்பாதுகாப்பு வலய வேலிகளைத் தாண்டி எமது சொந்த நிலங்களுக்குச் சென்று குடியமருவோம் என வலிகாமம் வடக்கில் இருந்து நலன்புரி நிலையத்தில் வசிக்கும் முத்தையா சிவானந்தன் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல், யாழிலுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது, அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து 26 வருடங்களில் நாங்கள் 16 வீடுகள் மாறியுள்ளோம். மீள்குடியேற்றக்கோரி கடந்த 1990ஆம் ஆண்டு முதல் பல போராட்டங்களை நடத்தி வருகின்றோம். எங்களால் தெல்லிப்பழை துர்க்கையம்மன ஆலயத்தில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து-கொண்டிருந்தார்.

போர் நடவடிக்கைக்காக இராணுவம் கையகப்படுத்திய காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அப்போது அவர் கூறியிருந்தார்.

## நிரந்தர நியமனம் ஆறு மாதத்திற்குள்

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆறு மாத காலப்பகுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் வடமாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடமாகாண சபையின் முன்பாக வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 100 தொண்டர் ஆசிரியர் வடமாகாண சபையின் முன்பாக கடந்த வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். பல ஆண்டுகளாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் தங்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை யெனவும் விரைந்து நியமனம் வழங்குமாறு கோரி இவர்கள் போராட்டம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு



## கோவலன் நான் கண்ணகி

உனக்கும் எனக்குமான
நாட்களின் உன்னதமான
பொழுதொன்றில்

என்னைச் சுமந்தபடி
நீ - தெருத்தெருவாய்
திரிகின்றாய்
தெருவின் நிறமேறி.

ஒரு நாளின்
முப்பொழுதுகளையும்
நுகரும் உன் - அழகு
கொட்டிக் கிடக்கிறது
அத் தெருவின் வழியே!

நிறம் உதிர்ந்து
போனதின் - பின்
கன்னச் செழிப்பு
கழன்றகன்றது... நீ
யெனைச் சுமந்து
திரியும் தெருக்களில்
அவை -
திசைக்கொன்றாய்
சிதறிப் பறந்தன...

நீயோ பெண் -
பெண் என்றால் அழகு ...
எனைச் சுமந்து
திரிந்த தெருக்களின்
வழியே யுதிர்ந்த - உன்
அழகுகளின் பின்னும்

பேரழகியாய் - என்
கண்ணே - நீ
புலப்படத் தெரியுது
என் காதல்...

நின் நிறம்
தாண்டிக் - கருந்
தோல் தாண்டிச்
சுருங்கிய தனங்களின்
ஊற்றுக்கள்
வற்றிய பின்னரும் -
உள்ளே
புதைந்து கிடக்கும்
மன உணர்வுகளிற்
கொண்டேகும்
என் - காதலாய் - பெண்ணே
பேரழகியாய் - நீ
இப் பூவுலகிற்
தெரிகின்றாய் ...

எனைக் காவிச்
செல்கின்றாய் -
நான் - முடவன்
கண்ணுக் கெட்டாத்
தூரத்திற்
கொம்புத்தேன் -

நீ - எனைச்
சுமந்த படி
தெருத் தெருவாய்
திரிகின்றாய் ....

< < மாயன் > >

## ஆறறிவாமோ?

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

விலங்கினின்றும் மாந்தன் என்றே
விளம்பினாரே டார்வின் அன்று!
விலங்கானான் மாந்தன் இன்று,
விளம்புவானேன் பார்க்கலாம் நாம்!

சண்டை என்றும் பிடிக்கின்றானே,
சரிகின்றானே சவங்கள எனவே!
பண்டை மகாபாரதமுந் தான்,
பயிலும் இராமாயணமுந் தான்!

கடத்திச் சினந்து கொல்கின்றானே,
காசு கேட்டும் கடத்துகிறானே!
படத்தைப் பார்த்தும் பழகினானோ?
பாழாய்ப் போனானே இம்மாந்தன்?

விலங்கு வீண்கொலை செய்வதில்லை,
விரும்புதல் பசிக் குணவைத்தானே!
கலங்குகின்றானே மடமாந்தன்,
கண்டதன் போறாம் ஆறறிவாமோ?

## நட்பு

நிலாரசிகன்

தினம் தினம் திட்டும்
அப்பாவின்
வார்த்தைகளைவிட
திட்டாமல் நகரும்
நண்பனின் மௌனம்
கொடியது.....

## காதல்

வே. மேனுகா
வகோதயாகர்

உன்னை மறக்கத்தான்
பேனை எடுத்தேன் - ஆனாலும்
இன்றோ என் எழுத்துக்களில் கூட
உன் மூச்சுக் காற்றுத் தான்
நிறைந்திருப்பதை உணர்கின்றேன் ......

நிறங்களைள மறக்க நினைத்தேன்
நினைவுகளில் வந்தாய்
நினைவுகளை தொலைக்க நினைத்தேன்
தொலைந்து போனேன் நானே ......

கடிகார முட்களை பார்த்துப் பார்த்து
காலங்கள் போகின்றது எனக்கு
காலன் வருவான் என்று காத்திருக்கிறேன் - உன்
காலடியில் சேர்வதற்கு ......

கல்லறை ஒன்று கட்ட நினைத்தேன் - உன்
கல்லறைக்கு பக்கத்தில் எனக்கான
கல்லறை உன்னருகில் - என்றும்
பிரியாமல் நாமிருவரும் வாழ்வோம்

## நீதி தேவதையின் நேர்மையான செயற்பாடு......

சேனையூரான

இறுதிக் கட்டப் போரில்
இடம் பெற்ற கொடுமைகளை:
மறந்து விட முடியுமா: தமிழர்
மனித மனமென்ன கல்லா?

சொல்ல முடியாது: அனுபவித்த
துன்பக் கதைகளை: தமிழர்
சோகம் தணியுமா? நொந்தோர்
துயரம் துடைக்காமல் !

இரு தரப்பிலும் குற்றம்
எவர் இழைத் தாலும்:
அது குற்றம் குற்றமே தான்,
தப்புச் செய்தோருக்கு: இங்கு
தகுந்த தண்டனை அளிப்பதே
நீதி தேவதை செய்யும்
நீதியான செயற்பாடு!

ஆறு வருடங்கள்: இங்கு
கூறப்பட்ட நீதி விசாரணைகள்:
நீற்றுப் போன தல்லாமல்
நிறைவேற்றப்படவில்லை:
தோற்றுப் போனது: இங்கு

உள் நாட்டு விசாரணைத்தீர்வு:
நேற்று இன்று போனது போகட்டும்
நாளை நடப்பவைகள்: எல்லாம்
நல்லவையாக அமையட்டும்!

## என்றறிவோம் !

வீரத்தை நோக்கிய பயணத்தில்
விதி விளையாடியது அன்று !
விவேகத்தை நோக்கிய பயணத்தில்
உரிமையை இழந்தது இன்னு !
வாழ வைத்த படியில் தன் உரிமையிழந்தான் !
வாழ்க்கை படியில் தன் உரிமையிழந்தான் !
ஈழ நாட்டை இழந்ததை அறிவோம்
முழு நாட்டையும் இழந்ததை என்றறிவோம்!

((கிஷோ - லிங்கநகரான்))

## பழமொழிகளின் பழம்பொருண்மைகள்




6. "சேலை கட்டிய மாதரை நம்பாதே"
இப்பழமொழி மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் சேலை கட்டிய மாதரை நம்பக்கூடாது. சுடிதார், ஜீன்ஸ், பாவாடை, தாவணி போட்டிருக்கும் பெண்களை நம்பலாம் என்பது போல் தோன்றும். உண்மை அதுவன்று.
சேல் அகட்டிய மாதரை நம்பாதே சேல் போன்ற கண்களை அகட்டி, அகட்டி ஆடவரைத் தேடும் இழிகுணம் உடைய பெண்களை நம்பாதே என்பதுதான் இதன் உண்மைப்பொருள்.
7. "சிவபூசையில் கரடி நுழைந்தாற் போல்"
சிவபூசை வீட்டிலோ, கோயிலிலோ நடைபெறும். அப்பொழுது எப்படி கரடி நுழைய வாய்ப்பிருக்கும்? சிவபூசை பொருத்தமான இன்னிசை அருள் பாடல்களோடு இன்னியம் முழங்க நடைபெறுவது அப்போது ஒலிச்சீர்மை அற்ற ஓசை சத்தம் கேட்டால் பூசையில் ஈடுபாடு வருமா? கரடியை எனும் ஒலிக்கும் கருவி அதைத்தான் செய்யும்.
சிவபூசையில் கரடிகை ஒலித்தாற் போல என்ற பழமொழியே சிவபூசையில் கரடிகை நுழைந்தாற்போல என மாறி வழங்குகிறது.
8. "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்."
இதன் பொருள் முரண் [illegible] பண்டைத் தமிழர் [illegible] மூலிகை அதன் வேர்கள் பற்றி அறிந்தவர்கள். மூலிகை மருந்துகள் தயாரித்தளித்து நோய்களை நீக்கினர். மருத்துவர்கள் அதற்கு அதிக எண்ணிக்கையில் வேர்களைப் பயன்படுத்தினார்கள்.
"ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியவன்" என்று பழமொழியின் பொருளைப் புதுமைப்படுத்தினால் பழம்பொருள் விளங்கும்.
9. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது
இது கூட தெரியாதவர்களா தமிழர்கள்? இது தெரியாமலா இப்படிச் சொல்லி வைத்திருப்பார்கள்?
ஓட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
சதைப்பகுதி, ஓடு எனப் பிரித்தறியக்கூடிய முற்றிய சுரைக்காய் ஓட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது அவர்கள் சொல்லி வைத்த உண்மை. ஓட்டுச் சுரைக்காய் குடுவைக்கு ஆகும் கறிக்கு அகாது.
10. கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே
கன்னத்தில் கை வைக்காமல் வேறு எங்க வைப்பது? பழமொழி எதைக் கூறுகிறது?
கன்னம் கன்னம் வைத்துத் திருடுதல் சுவரில் ஓட்டையிட்டு உள்ளே புகுந்து திருடுதல் கப்பம் கவிழ்ந்தாலும் திருடக்கூடாது என்பது அதன் பொருள்.
11. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்....... எப்படி வளரும்? ஊர்ப்பிள்ளைத் தானே வளரும்? இதன் பொருளை இப்படிப் பாருங்கள் ஊரான் பிள்ளை மனைவி தன் பிள்ளை - மனைவியின் வயிற்றில் வளரும் தன் குழந்தை. தன் பிள்ளை வளர - தானே வளர- ஊரான் பிள்ளையாகிய மனைவியை ஊட்டி வளருங்கள்.
12. கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்
கண்டதைக் கற்க எப்படி பண்டிதன் ஆக முடியும்? மாணவர்கள் கண்டதைக் கற்கிறார்களே! பண்டிதர் ஆகவில்லையே!
கண்டு அதைக் கற்கப் பண்டிதன் ஆவான். இன்ன நூல்களைக் கற்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்துக் கற்றால் பண்டிதன் ஆக முடியும் என்று கருத்துரைக்கிறது இப்பழமொழி.
13. மார்கழி பீடை மாதம்
இப்படி சொல்லியிருப்பார்களா? இப்படி இருக்க முடியுமா? மாதங்களில் கண்ணன் மார்கழியாக இருப்பதாக பெருமையாக இம்மாதம் பேசப்படுகிறது.

தொடரும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் கற்பிக்கும் சன்சோனி ஆணைக்குழு

– கதிர் செல்லமுத்து –

2012 ஆம் ஆண்டு ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தில் தொடங்கிய இலங்கை பற்றிய தீர்மானங்களும் விவாதங்களும் இவ்வாண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துவிட்டன, சில ஊடகங்கள் ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டவை சிறீலங்காவிற்கு எதிரான தீர்மானங்கள் என்று பெரிதுபடுத்தித் ஈழத்தமிழ் மக்களுக்கு ஏதோ நன்மைகள் வந்து விடும் எனப் பரப்புரை செய்தன. இதையே தான் தமிழ் அரசியல் கட்சியும் செய்தது. ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட அமெரிக்கத் தீர்மானங்களை வலுவுள்ளதாக்கத் தாம் பாடுபட்டதாகவும் போர்க்குற்ற விசாரணை சர்வதேச அளவில் நடைபெறும் என்றும் அது தமது சாதனை என்றும் அரசியல் கட்சி பரப்புரை செய்தது.

மகிந்த ராஜபக்சேவின் ஆட்சி சீனா பக்கம் சார்ந்து தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டதை அமெரிக்காவும் இந்தியாவும் பொறுத்துக் கொள்ள முடியாமல் இந்து பெருங்கடல் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தால் தமக்கு ஏற்படும் ஆபத்தை உணர்ந்தும் 2009 இல் இலங்கைத் தீவில் நடந்த இன அழிப்பை மனிதப் பேரவலத்தைக் கருவியாக வைத்து போர் முடிந்த மூன்று ஆண்டுகளின் பின்னர் 2012 இல் ஐ.நாவின் மனித உரிமைச் சபையில் இலங்கை பற்றிய தீர்மானத்தை முதன் முறையாக முன்மொழிந்தனர்.

2006 இல் மாவிலாற்றில் தொடங்கிய போர் விரிவடைந்து தென்தமிழீழத்தின் வாகரையில் மனிதப் பேரழிவை ஏற்படுத்தியது. வாகரையில் மக்கள் மீது குண்டுகள் வீசியும் எறிகணைகள் வீசியும் தமிழினத்தைப் படுகொலை செய்தனர். உணவு அனுப்பப்படாமல் நீர் இல்லாமல் மக்கள் பெரும் துன்பத்தை வாகரையில் அனுபவித்தனர். உணவும் நீரும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டன. இந்தக் கொடுமையை உலகம் கண்டு கொள்ளவில்லை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மனித உரிமைக் கழகங்கள் வாகரையில் ஏற்பட்ட மனித அழிவைக் கண்டு கொள்ளவில்லை. இந்த வாகரைத் தாக்குதல் தான் வன்னியில் நடந்த இனப்படுகொலைக்கான ஒத்திகைத் தாக்குதலாகும்.

**அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் சன்சோனியை வரவேற்றார்...**
**இன்று எதிர்கட்சித் தலைவராக இருக்கும் சம்பந்தன் உள்ளக விசாரணையை வரவேற்கிறார்.**
**இதிலும் குற்றம் சுமத்தப்போவது தமிழர் தரப்பையே**

வாகரையில் தான் நடத்திய இனஅழிப்பை உலகம் கண்டுகொள்ளாத நிலையில் சிறீலங்கா அரசு அதே உத்தியை வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் நடத்தித் தமிழின அழிப்பை நிறைவு செய்தது. இப் பேரவலத்தை நடத்துவதற்குச் சிறீலங்கா அரசிற்குத் துணை போன நாடுகளின் வரிசையில் அமெரிக்கா இந்தியா பாகிஸ்தான் சீனா ஐரோப்பிய ஒன்றியம் என்பன உட்பட 25 நாடுகளுக்கும் மேற்பட்ட நாடுகள் அடங்குகின்றன.

உலக சமாதானத்திற்காக நிறுவப்பட்ட-தாகக் கூறப்படும் ஐக்கிய நாடுகள் அவை இந்த இனப் படுகொலையைக் கண்டுகொள்ளவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தன் கண்களை மூடிக்கொண்டது மனித உரிமை நிறுவனங்களில் சில மாத்திரம் கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. மொத்தத்தில் இவ்வாறான இன அழிப்பு அண்மைய கால வரலாற்றில் உலகின் வேறெந்தப் பகுதியிலும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

போரில் சிறீலங்காவிற்கு அனைத்து வகையான உதவிகளையும் செய்த நாடுகள் போருக்குப் பின்னர் சிறீலங்கா அரசு சீன சார்பு நிலையை எடுத்ததனால் மனித உரிமை ஆணையத்தைத் தமது ஆயுதமாக எடுத்தனர். இந் நாடுகளில் பெரும்பாலானவை அமெரிக்க ஆதரவு நாடுகளாகும். இந்நாடுகளுடன் இணைந்தே அமெரிக்கா இலங்கை பற்றிய தீர்மானத்தை ஜெனிவாவில் 2012 இல் முதன் முறையாகக் கொண்டு வந்தது. அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டு வருவதன் மூலம் தனது வரம்புக்குள் சிறீலங்காவை வைத்திருக்க முயன்றதேயன்றிப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தீர்மானம் கொண்டு வரவில்லை.

இங்கே இந்தியாவும் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருந்தது. சிறீலங்காவிற்கு பல வழிகளிலும் உதவிப் போரில் தமிழ் மக்களைத் தோற்கடிக்க உதவிய இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை முழுமையாக ஆதரித்ததால் தனது போர்ப் பங்களிப்பு வெளிச்சத்துக்கு வந்து விடும் என்ற நிலையும் சிறீலங்கா முழுமையாகச் சீனா பக்கமும் பாகிஸ்தான் பக்கமும் சார்ந்து விடும் என்ற பயமும் ஏற்படவே அமெரிக்காவின் தீர்மானத்தின் கடுமையை நீக்கி நீர்த்துப் போக வைத்தது. இதன் மூலம் தனது நிலையைச் சிறீலங்காவில் தளர்வடையாது காப்பாற்றிக் கொண்டது.

2015 ஜனவரி 8 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளுக்குச் சற்றுச் சாதகமான நிலையை ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முழுமையான ஆட்சி மாற்றத்தைக் கொடுத்தது.

1947 இல் அந்நிய ஆட்சியாளர்கள் வெளியேறிய பொழுது இங்கு ஏற்பட்ட ஆட்சி முழுமையான அமெரிக்க சார்பு ஆட்சியாகவே இருந்தது. இதனை 1956 இல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா மாற்றியமைத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை போன்ற நிலைக்குச் சிறீலங்காவைக் கொண்டு சென்றார். ஆனால் பின்னர் ஆட்சிகள் மாறி மாறி வந்த பொழுது வெளியுறவுக் கொள்கையும் மாறிக் கொண்டே இருந்தது. இந்நிலையில் தான் மகிந்த ராஜபக்சேவின் ஆட்சி போரை நடத்தப் பல நாடுகள் உதவிய போதும் அவரது ஆட்சி சீனா பக்கமே சார்ந்திருந்தது. அதனால் வலுவான தீர்மானங்களைக் கொண்டு வந்த அமெரிக்க ஆட்சி மாற்றம் அமெரிக்க சார்பு அரசாக இருந்ததால் தனது தீர்மான வரைவுகளையும் தளர்த்தி சிறீலங்காவிற்குச் சார்பாக இடும்படி பார்த்துக் கொண்டது. இவ்வகையான நிலை ஏற்பட இந்தியாவும் ஒரு காரணமாகும்.

தற்பொழுது ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படாமலே நிறைவேற்றப்பட்டுள்ளது. சிறீலங்கா தனது ஆதரவைத் தீர்மானத்திற்கு வழங்கியுள்ளது. தமிழர் தரப்புகள் பல தீர்மானத்தை வரவேற்கத் தயங்கிய நிலையில் சுமந்திரன் தனது கட்சி மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக் கூறியுள்ளார். சர்வதேசம் என்ற சொல் நீக்கப்பட்டு வெளிநாடுகள் பொது நல நாடுகளின் பங்களிப்புடன் உள்ளக விசாரணை என்று தீர்மானம் வரையறை செய்கின்றது. இதில் இவர்களையும் இணைத்த விசாரணை என்ற சொற்பதம் இன்மையால் வெளியார் வெறும் பங்களிப்பாளர்களாக இருப்பார்களேயன்றி விசாரணையில் பங்குபெறும் நீதிபதிகளாகவோ வழக்கறிஞர்களாகவோ இருக்க மாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இதே நேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அமெரிக்காவில் இருந்தே நியூயோர்க் ரைம்ஸ் ஏட்டிற்கு வழங்கிய செவ்வியில் "வெளிநாட்டுச் சட்டவாளர்களை இங்கு அனுமதிக்க முடியாது" என்று அழுத்தமாகக் கூறியுள்ளார். விசாரணைப் பொறிமுறை உள்ளக ரீதியாகவே அமையும். என்று கூறிய மைத்திரிபால சிறிசேனா "மதத் தலைவர்கள் இராணுவ அதிகாரிகள் அரசியல் கைதிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி மிகவும் நிதானமாக நீதிமன்றக் கட்டமைப்பு உருவாக்கப்படும்" என்றும் கூறியுள்ளார்.

**மதத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள், அரசியல் கைதிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி மிகவும் நிதானமாகவே கட்டமைப்பு உருவாக்கப்படும் – மைத்திரி**

இத்தீவிலுள்ள மதத் தலைவர்கள் அரசியல்வாதிகளின் எவ்வாறான சிந்தனைகளுடனும் கொள்கைகளுடனும் இருக்கின்றனர் என்பது வெளிப்படை. எனவே நடைபெறப் போகும் விசாரணையானது எவ்வாறு இருக்கும் என்பது சொல்லி விளங்கத் தேவையில்லை.

1977 ஆம் ஆண்டு சிறீலங்காவின் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பிரதமராகப் பதவி ஏற்றபின் ஆகஸ்ட் மாதம் தமிழினத்தின் மீது திட்டமிட்ட இனப்படுகொலை ஏவிவிடப்பட்டுப் பல தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன. பல இலட்சம் பெறுமதியான சொத்துகள் எரிக்கப்பட்டன சூறையாடப்பட்டன. யாழ்ப்பாண நகரம் எரிக்கப்பட்டன.

இந்த வன்செயலை விசாரிக்க வேண்டும் அதற்கொரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்கும் படி அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்திலே ஒரு கோரிக்கையை முன்வைத்தார். விசாரணைக் குழுவின் தலைவராகப் பறங்கி இனத்தவரான இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதிபதி சன்சோனியை நியமிக்குமாறும் அமிர்தலிங்கம் கூறியிருந்தார். சிங்களவர்களில் ஒருவர் நியமிக்கப்படுவதிலும் பார்க்கப் பறங்கி இனத்தவர் நடுநிலை வகிப்பார் என்பதுடன் நீதிபதியாகச் சிறந்து விளங்கியவர் சன்சோனி என்ற கருத்துக்கு அமையவே அவரை நியமிக்கும் படி கேட்டனர். சிறிது நாட்களின் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சன்சோனியை விசாரணைக் குழுவின் தலைவராக நியமிப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அமிர்தலிங்கம் மிகுந்த மகிழ்சியுடன் அதனை வரவேற்றார். இந்த ஆணைக்குழுவின் செயலாளராக சிங்கள இனவாதியான நிர்வாக சேவை உத்தியோகத்தரான திஸ்ஸ தெய்வேந்திராவையும் ஜே.ஆர் நியமித்தார்.

இந்த ஆண்டுக் குழுவின் விசாரணை கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு எனப் பல்வேறு இடங்களிலும் நடந்தது. யாழ்ப்பாண பொது நூலக மேல் மாடியில் விசாரணைகள் பல நாள்கள் நடைபெற்றன. இவ் விசாரணையில் மிகப் பெரிய தமிழ்ச் சட்ட அறிஞர்கள் தமிழர் தரப்புக்காக வாதிட்டனர். இவ்வளவு தொகையான சட்ட மேதைகள் அரசியல் நோக்கங்கள் எதுமின்றித் தோன்றியது தமிழ் மக்களிடையே பெரிய மகிழ்வை ஏற்படுத்தியது. இன்று சிலர் தாங்கள் தான் சட்டம் படித்தவர்கள் என்று தற்பெருமை பேசி வருவதை நினைக்கும் பொழுது அன்று கொழும்பு நீதிமன்றங்களில் பெரும் பெயருடன் விளங்கிய சட்டமேதைகள் எதுவித எதிர்பார்ப்புமின்றி இலவசமாகத் தமிழர் தரப்புக்காகத் தோன்றி வாதிட்டமை பெருமைக்குரியது.

இதே நேரம் இவ் - விசாரணைகளை அப்படியே மக்களைச் - சென்றடைவதற்காகச் சன்சோனி விசாரணை என்னும் ஏடும் முழு விசாரணைகளுடன் வெளியிடப்பட்டது. விசாரணையின் போக்கு நன்றாக இருந்ததினால் நல்ல அறிக்கைதான் வரும் பறங்கிய இனத்தவர் நீதி தவறமாட்டார் என்ற நம்பிக்கை எங்கும் இருந்தது. ஆனால் நீண்ட இடைவெளியின் பின்னர் சன்கோனியின் விசாரணைத் தீர்ப்பு அறிக்கை வெளியிடப்பட்டது அதில் நடந்த வன்முறைகளையிட்டுக் கவலையும் கண்டனமும் தெரிவித்த விசாரணை அறிக்கை அதற்குரிய இழப்பீடுகள் வழங்க வேண்டும் என மேலெழுந்த-வாரியாகக் கூறிவிட்டு நாட்டில் ஏற்பட்ட இந்நிலைமைக்கு அமிர்தலிங்கத்தின் உரைகளே காரணம் என்றும் அதனால் தமிழ் இளைஞர்கள் உணர்ச்சியடைந்து வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் அதனாலேயே நாடு முழுவதும் வன்முறை ஏற்பட்டதாகவும் தமிழர் தரப்பு மீதே பெரிய குற்றச்சாட்டைப் பதிவிட்டது.

இதன் பின்னர் சன்சோனி ஜே.ஆர் வழங்கிய நல்ல சம்பாத்தி-யத்துடன் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று குடியேறிவிட்டார்.

அன்று அவ்வின அழிப்புக்கு கிடைத்த நீதி அவ்வளவுதான். இப்பொழுது 2009 இல் இடம்பெற்ற மனிதப் பேரவலத்திற்கு உள்நாட்டின் மதத் தலைவர்கள் இராணுவத்தினர் அரசியல் வாதிகளின் கருத்துக்கு அமைவாக ஏற்படுத்தப்படவிருக்கும் விசாரணை எத்தகைய முடிவைத் தரும் என்பது வெள்ளிடமலையே.

மக்களைப் பலவந்தமாக இழுத்துச் சென்ற புலிகள் மக்களை மனிதக் கேடயமாக வைத்து அரசுப் படைகளைத் தாக்கியதால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்களேயன்றி சிறீலங்காப் படைகள் மனிதாபிமானத்தோடு பயங்கரவாதிகளிடமிருந்து மக்களையும் மண்ணையும் மீட்க மிகவும் குறைந்த மனித உயிரிழப்புக்களுடன் போரிட்டது என்று அரசும் இராணுவமும் கூறிவரும் கருத்துகளுக்கு அமைவாகவே தீர்ப்பு வரும்.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழரான அமிர்தலிங்கம், சன்சோனியை வரவேற்றவர் இன்றும் 35 ஆண்டுகளின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் தமிழரான சம்பந்தன் இவர் வரவேற்கும் உள்ளக விசாரணை குற்றம் சுமத்தப் போவது தமிழர் தரப்பையே இதற்காக எங்கும் தேடிப் போகத் தேவையில்லை. இதுதான் வரலாறு காட்டும் உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 74

# கீர்த்தியும் புகழும்

(வி. என். சந்திரகாந்தி)



கீர்த்தி, புகழ் என்பன ஒத்த பொருட்கிழவிகளாகும். அவை மனிதர்களின் சிறப்பை விந்துரைப்பனவாகும். திருவள்ளுவர் தனது நூலில் 'புகழ்' பற்றி ஒரு அத்தியாயத்தை உள்ளடக்கியுள்ளார்.

இப் பூவுலகில் வாழும் மக்கள் அனைவருமே கீர்த்தியின் மீது அதிக மோகம் கொண்டவர்கள் தான். பலர் அதற்காக கஷ்டப்பட்டு உழைக்கவும் செய்கின்றார்கள். ஆனால் கீர்த்தி இலகுவில் அடையக்கூடிய தொன்றல்ல. அதற்கான அடிப்படைகளை புரிந்துகொண்டு எவன் ஒருவன் வாழ்கின்றானோ அவனுக்கே கீர்த்தியும் புகழும் கிட்டும்.

நாம் ஒவ்வொருவரும் தீவினைகளை அகற்றி அறம் புரிதலை இலக்காக கொள்ளவேண்டும். பொருள் சம்பாதிப்பதில் பிறர் பழி சுமத்த இடம் கொடுக்கக் கூடாது. பிறரில் அன்பு செலுத்த வேண்டியது எமது கடன். தானம் செய்தல் கட்டாயம் . பிறருடன் பேசும் போது மனதிற்கு உவகை தரும் இனிய சொற்களை தேர்ந்தெடுத்து. பயன்படுத்த வேண்டும். அது மற்றவர்கள் எம்மேல் அன்பு செலுத்த வழிவகுக்கும். மலர்ந்த முகமும் பணிவும் எம்பால் பிறரை வசீகரிக்கும். பிறர் செய்த நன்மையை மறவாது இருப்பது. உதவி செய்யாமலே நாம் பிறருக்கு உதவுதல், அவசியமான சந்தர்ப்பத்தில் முன் வந்து தோள் கொடுத்தல், பலனை எதிர்பாராமல் உதவுதல் போன்றவை உயர் பண்புகளாகும். அறிவிலும் ஒழுக்கத்திலும் குற்றமற்றவர்களின் நட்பை பேண வேண்டும். செய்நன்றி மறத்தலாகாது.

உலகில் இன்று நடுவு நிலைமைக்கு கேடு விழைந்துள்ளது. எத்தரப்பால் சார்பிலும் நடுவு நிலையை பேணுதல் சிறந்த அறமாகும். நன்மை உண்டாகுமென்றாலும் அது நடுவு நிலைமைக்கு மாறானதாயின் அச்செயலை கைவிடுதல் நன்று. அதே போன்று அடக்கம் போற்றுதற்குரிய ஒரு பண்பாகும். மெய் மொழி, மனங்கள் தீய நெறியில் செல்லாது கட்டுப்படுத்தல் வேண்டும். அப்போதுதான் ஒருவர்க்கு ஒழுக்கம் உண்டாகும். ஒழுக்கம் இல்லாத எவர்க்கும் உயர்வு இல்லை. அதே போன்று கல்வியில் மேலானவர்களாக இருந்தாலும் கூட உலகத்தோடு ஒட்டி வாழாதவரை உலகம் ஏற்காது.

இனி பொறுமை சிறந்த பண்பாகும். பிறர் தீங்கு செய்த இடத்தும் அதனை பொறுத்துக் கொள்பவரை எவரும் போற்றுவர். பொறாமை, கோபம், புறங்கூறல், தீவினை ஆகிய குற்றங்களை விலக்கி நடத்தல் பெரியோர் பண்பாகும்.

வறியவர்களுக்கு தானம், கொடை போன்றவற்றை வழங்குபவர்க்கு பெரும் கீர்த்தி உண்டாகும். கீர்த்தி ஒன்றுதான் உலகத்தில் அழியாது. புகழோடு வாழவேண்டும். அது இயலாவிட்டால் வாழ்ந்தும் பயனில்லை. கீர்த்தி ஒருவருக்கு பிரபல்யத்தை கொடுக்கின்றது. பலர் அவரை அவரது பெயரை அறிந்து வைத்திருக்கின்றார்கள். மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றார்கள். ஏதாவது ஒரு துறையில் தனது திறமையை ஒருவரால் வெளிப்படுத்த முடிந்தால் முதற்பட்சமாக அந்த துறையை சார்ந்தவர்கள் அவர் பற்றி அறிந்துகொள்கின்றார்கள். படிப்படியாக அவரது புகழ் மக்களால் பேசப்பட்டு உலகம் பூராகவும் பரவுகின்றது. பின்னர் விருதுகளும் கௌரவங்களும் அவரை நாடி வரத் தொடங்குகின்றன.

எவர் ஒருவர் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு சமூகத்திற்காக உழைக்கின்றாரோ அவர் மக்களால் அறியப்பட்டு போற்றப்படுவார். பொதுவாக மக்கள் பல தேவைகளின் மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருப்பர். கஸ்டங்களும் நெருக்கடிகளும் அவர்களை வாட்டிக் கொண்டிருக்கும். அடிமைப்படுத்தப் பட்டிருப்பார்கள். ஆபத்துக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். பசியின் வேதனையில் துடித்துக் கொண்டிருப்பார்கள். மார்ட்டின் லூதர் கிங் (1929-1968) இன விடுதலைக்கான ஒரு தலைவராக புகழ் பெற்றார். மிக குறைந்த வயதில் சமாதானத்திற்கான நோபல் பரிசும் அவருக்கு கிடைத்தது. அவரிடம் பேச்சு திறன் இருந்தது. எழுத்தாற்றல் இருந்தது. அவர் ஒரு வக்கீலாக இருந்து ஆபிரிக்க அமெரிக்க கறுப்பு இனத்தவர்களின் உரிமைகளை பாதுகாக்க சிவில் உரிமைகள் சட்டம் கோரி வன்முறையற்ற எதிர்ப்புக்களையும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினார். 1964ல் மனித உரிமைகள் சட்டம் இயற்றப்பட்டது.

தமது வாழ்நாளை மக்களுக்கு சேவை செய்ய என ஒதுக்கி தமது சுகபோகங்களை துறந்த அப்போராளியின் கீர்த்தி உலகம் உள்ள அளவும் நிலைத்திருக்கும் அல்லவா?

அப்படியல்லாமல், உலகில் பல சர்வாதிகாரிகள் தமது கொடுமைகளால் நன்கு அறியப்பட்டவர்களாக இருப்பது மறுவளம்! உகண்டா நாட்டின் 'இடி அமீனை' நாம் எவருமே மறப்பதற்கில்லை. எமது காலத்தில் வாழ்ந்து மடிந்த கொடூரம் மிக்க சர்வாதிகாரி. தான் இட்டதே சட்டம் தான் நினைத்த எதுவும் நிறைவேற வேண்டும் என்று பிடிவாதம் பிடித்த மனித மிருகம்... பல பெண்களை தனது இச்சைக்கு பயன்படுத்தி துன்புறுத்திய கயவன். பலஇலட்சம் மக்களை கொன்று குவித்த அவன் 2003ல் சவுதியில் சுகயீனமுற்று மரணமாகி அங்கேயே அடக்கம் செய்யப்பட்டான்.

ஒரு உண்மையை நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும். சர்வாதிகாரத்தாலும் வன்முறையாலும் ஒருவர் பிரபல்யமாவாராயினும் அது அவருக்கு கிடைக்கபெற்ற கீர்த்தி என்று கொள்ளலாகாது. அதனை அபகீர்த்தி என்றே சொல்லவேண்டும்! உண்மையில் கீர்த்தியானது அடக்கம் பணிவு ஒழுக்கம், அன்பு ஈதல் ஆகிய நற்பண்புகளின் மேல் கட்டியெழுப்பபடவேண்டியது. அதனை பணத்தாலும் செல்வாக்காலும் பெற்றுக்கொள்ள முடியாது.

அதனால் தான் தம்மை ஒறுத்து மக்களுக்கு சேவை செய்த பல மத ஸ்தாபகர்கள் அழிக்கமுடியாத கீர்த்தி எய்தினர். ஆதிசங்கரர், புத்தர், இயேசு, ஸ்ரீ இராமகிருஷ்ணர் , சுவாமி விவேகானந்தர், ரமண மகரிஷி போன்றோர் உலகளாவிய ரீதியில் பிரபல்யமாகினர். மக்கள் அவர்களை பணிந்து தொழுகின்றனர். அந்த அளவுக்கு அவர்கள் தமது சேவையால் மக்களை கவர்ந்தனர்.

அதே போன்று கண்டுபிடிப்புக்களால் பலர் கீர்த்தி பெற்றனர்.' ரைட்' சகோதரர்கள்' விமானத்தை கண்டுபிடித்தனர். பாஸ்கல் என்பவர் கூட்டல் இயந்திரத்தையும், நியூட்டன் புவியீர்ப்பையும் , பன்டிங் மக்லியோட் நீரிழிவுக்கு அவசியமான இன்சுலினையும், மக்மிலன் துவிச்சக்கர வண்டியையும், மார்க்கோணி கம்பியில்லா தந்தியையும் கண்டுபிடித்து பிரபல்யம் அடைந்தனர். இன்னும் பல கண்டுபிடிப்பாளர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி மக்களுக்கு பயன்படும் விதமாக சேவை புரிந்துள்ளனர். அவர்கள் அனைவரதும் புகழ் போற்றத்தகுந்ததே.

அழியாத புகழுக்கும் பிரபல்யத்திற்கும் மக்களை கவரும் படியான அழகு ஒரு அடிப்படையாகின்றது. தாஜ்மகால் அதன் அழகிற்காகவும் கலைநுட்பத்-திற்காகவும் மக்கள் அனைவரையும் கவர்ந்துள்ளது. அதன் காரணமாகவே ஷாஜகானின் பெயரும் புகழும் கொடிகட்டி பறக்கின்றது.

மோனாலிசா ஓவியம் உலக புகழ் பெற்றது. அதே போன்று சாய்ந்த கோபுரம் உள்ளிட்ட உலகின் எட்டு அதிசயங்கள் வியக்க வைப்பவை. சந்திரனில் இருந்து ஒரு மனிதன் பூமியை வெற்றுக் கண்களால் பார்க்கும் போது மனித முயற்சியின் அடையாளமாக தெரிவது சீனப்பெருஞ்சுவர் மட்டுமே!

அறுபத்திநான்கு கலைகள் மனிதனின் கீர்த்திக்கும் புகழுக்கும் அடிப்படையாக உள்ளன. , நாட்டியம் சினிமா உலகை அலங்கரித்தது. பெரும் பெயரையும் ஈட்டிக்கொடுத்தது. இசைக்கு பணியாற்றி பெரும் மாமேதைகள புகழ் ஈட்டியுள்ளனர். நாடகக்கலை இன்று சினிமா துறையாக வளர்ந்துள்ளது.

படைப்பிலக்கியத்தில் பலர் பெரும் கீர்த்தியையும் புகழையும் சம்பாதித்துள்ளனர். வியாசரின் மகாபாரதம் , வால்மீகியின் இராமாயணம் ஆகியன ஆக்கியோருக்கு பெரும் கீர்த்தியை நிலைநாட்டியது. திருக்குறளால் திருவள்ளுவர் உலக புகழ் பெற்றார்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை எடுத்தால் கல்கி, அகிலன், மணிவண்ணன், பார்த்தசாரதி, புதுமைப்பித்தன், டாக்டர் வரதராஜன் ஜெயகாந்தன் உள்ளிட்ட அனேகம் பேர் எழுத்தாற்றல் படைத்தவர்களாக இருந்துள்ளார்கள். பாரதி கவிதைக்கு அழகு செய்து புகழ்பெற்றார். ஈழத்தமிழ் உலகின் எழுத்து துறைக்கு பல படைப்பாளிகள் கனதியான ஆக்கங்களை சமர்ப்பித்து பெரும் புகழ் ஈட்டியுள்ளார்கள்.

எனது எழுத்தாள நண்பர் ஒருவருக்கு கண்சத்திர சிகிச்சைக்காக இரத்தப்பரிசோதனை செய்ய வேண்டி இருந்தது. நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்ததால் பேச்சுத்துணைக்கு நானும் இணைந்து கொண்டேன். எதிர்பாராத விதமாக அதே வைத்தியசாலையில் பணிபுரியும் கவிஞர் ஒருவர் நண்பனை கண்டுவிட்டார். எழுத்தாளனை எழுத்தாளன் கண்டதில் மகிழ்ச்சி! உடனேயே எங்களை நேரே சிரேஷ்ட தாதி ஒருவரிடம் அழைத்துச்சென்றார். அவர் நண்பரின் பெயரை பார்த்ததும். 'ஓ... நீங்களா அந்த எழுத்தாளன்...? உங்கள் ஆக்கங்கள் நிறைய படித்துக் கொண்டிருக்கின்றேன்.' என்று கூறியதுடன் அவரது ஊர் உட்பட அவர் பற்றி தான் அறிந்த நிறைய விபரங்களை கூறினார். நண்பரின் விழிகளில் ஆனந்த கண்ணீர் வழிந்தது!

கீர்த்தி புகழ் என்பன தேடி அலைந்து பெற்று கொள்வதல்ல. அவை ஒருவரை தேடி



# நீங்கள் தான் உற்ற நண்பரோ??

திருகோணமலை உவர்மலையில் நிகழ்ந்தேறிய நண்பர்களின் உண்மை சம்பவம்.....

அவர்களிருவரும் மிகவும் நெருக்கமான நண்பர்கள். அவர்கள் தமது பள்ளிப் பருவத்திலிருந்து நண்பர்களா-யிருந்தனர். வவுனியாவைச் சேர்ந்த அவ்விருவரும் தமது வேலையின் நிமித்தம் திருமலைக்கு வந்து குடியேறினர். அவர்கள் இங்கு அறையொன்றை வாடகைக்கு பெற்று தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருவரும் சேர்ந்து ஒருவேளையேனும் உணவருந்துவர். அவர்கள் என்றுமே பிரிந்திருந்ததில்லை. அத்துடன் அவர்களுக்குள் எந்தவொரு ஒளிவு மறைவும் இருந்ததில்லை.

அன்று தனது நண்பன் மிகுந்த மன அழுத்தத்தில் காணப்பட்டான். உடன் மற்றையவன் அவனுக்குப் பிடித்த உணவை சமைத்து பறிமாறினான். இருப்பினும் அவன் சாதாரண நிலைக்கு வர மறுத்தான். என்ன நடந்தது என கேட்டு அவனை மேலும் நோகடிக்க அவன் விரும்பவில்லை. கடற்கரைக்குச் சென்று சற்று நேரம் உலாவி விட்டு வருவோமா? என அழைத்தான்.

இருவரும் கடற்கரைக்குச் சென்றனர். இருவருக்குள்ளும் பேச்சு பரிமாறப்படவில்லை. இருப்பினும் இவன் தன் நண்பனைப் பற்றி யோசித்த வண்ணம் இருந்தான்.

என்ன நடந்திருக்கும்??!!

நேற்று தனது பெற்றோரை பார்த்து விட்டு வருவதாகக் கூறி வவுனியா சென்றான். இரு தினங்கள் கழித்து தான் வருவேன் என கூறிச் சென்றவன் உடன் திரும்பியிருந்தான். எனில், .... வீட்டில் ஏதேனும் பிரச்சினையாக இருக்குமோ..

இல்லை அவ்வாறு நடக்க வாய்ப்பே இல்லை.

எனின், என்ன நடந்திருக்கும்???

சிறிது நேரத்தில் இருவரும் வீடு நோக்கிச் சென்றனர். அவனால் நித்திரைக்குச் செல்ல முடியவில்லை.

அவனை உற்றுப் பார்த்தான். அவனது உருவத்தில் சிறு மாற்றம் தெரிந்தது. எழுந்து சென்று முகம் அலம்பினான். மீண்டும் வந்து தனது நண்பனருகில் படுத்தான். அவனுக்குள் ஏதோவொரு பயம் மேலிட்டது.

ஏன் நான் வித்தியாசமாக உணர்கின்றேன். எனக்குள் என்ன நடக்கின்றது என யோசித்தவாறு தனது நண்பனைப் பார்த்தான். அவனோ தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான்.

எழுந்து படுக்கையில் அமர்ந்தவாறு அவனது பெயரைக் கூறி என்ன நடந்ததுடா? ஏன் இவ்வாறு நீயும் கஷ்டப்பட்டு என்னையும் கஷ்டப்படுத்துகிறாய். எதுவாயினும் என்னிடம் தெரிவி என்றான். ஆனால் அவன் கண்களோ நிலத்தைப் பார்த்தே பேசின.. ஏனோ தன் நண்பனைப் பார்த்துப் பேச கண்கள் மறுத்தன.

ஓர் இனம்புரியாத அமைதி பரவியது.

தனது தொலைபேசி அழைப்பதை உணர்ந்து எடுத்துக் கதைத்தான். மறு முனையில் தன் தாயார்.....

அழுது தழுதழுத்த குரலில்....

நான் கூறுவதை சற்று நிதானமாக கேள் என்று பயங் காட்டினார்.

அம்மா கூறிய விடயம் அவனை அதிர




வைத்தது.

எனில் தன்னுடன் இருப்பது....!!!!

மெல்ல தலை திருப்பி தன் நண்பனை பார்க்க முற்பட்டான். அவனது அழுத முகம் தன்னிலிருந்து மெல்ல புகை போல மறைந்து சென்றது.

கட்டிலில் புரண்டு புரண்டு அழுதேன். என்னை விடுத்து இவ்வளவு அவசரத்தில் ஏன் சென்றாய் என கதறினான். அவன் தன்னை ஒருநிலைப்படுத்த மாத காலம் அவகாசம் தேவைப்பட்டது.

(வவுனியா நோக்கி பயணப்பட்டவன் சென்ற பேருந்து வண்டி விபத்தில் சிக்கியதும், அவ்விபத்தில் தன் நண்பன் உயிரை விட்டதுமே அவன் தாய் உரைத்தவை)

(தன்யா )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

# "யட்சன்"

### விஷ்ணுவர்தனின் இயக்கத்தில் ஆர்யா, தீபா சன்னதி நடிக்கும்

தூத்துக்குடி சின்னாவாக ஆர்யா, தீவிர தல அஜித் ரசிகர், அஜித் படத்தின் டிக்கெட்டை ஒருத்தன் கிழித்துவிட்டான் என்பதற்காக அவனை யதார்த்தமாக அடிக்க, அவனோ ஒரு கம்பியில் மோதி இறக்கிறார். அதோடு பெட்டிபடுக்கையை எடுத்துக்கொண்டு சென்னை வருகிறார் ஆர்யா. இதேபோல் பழனியில் இருக்கும் கிருஷ்ணா சினிமா மோகத்தால் சென்னை வருகிறார். ஆர்யா சென்னை வந்ததுமே தம்பி ராமையா அவரை ஒரு பெண்ணை(தீபா சன்னதி) கொலை செய்ய சொல்கிறார். இவரும் காசுக்காக அவரை கொலை செய்ய சம்மதிக்கிறார். ஆனால், பார்த்தவுடன் காதல், இருந்தாலும் பணம் முக்கியம் என்று அவரை கொல்ல ஒரு நாளை தேர்ந்தெடுக்க, ஆர்யா, அதே நாளில் கிருஷ்ணாவை, எஸ்.ஜே.சூர்யா தன் படத்தில் ஹீரோவாக அறிமுகப்படுத்தவுள்ளார். அன்றைய தினம், ஆர்யா ஏற வேண்டிய வண்டியில் கிருஷ்ணாவும், கிருஷ்ணா ஏற வேண்டிய வண்டியில் ஆர்யாவும் ஏற, அதன்பின் இவர்கள் வாழ்க்கை என்னவாகின்றது, தீபா சன்னதியை ஏன் கொலை செய்ய ஒரு கும்பல் துரத்துகின்றது? என்பதை அறிந்தும் அறியாமலும் ஸ்டைலில் செம்ம ஜாலியாக கூறியிருக்கிறார் விஷ்ணுவர்தன்.

ஆர்யா உண்மையாகவே இவர் ஸ்டைல் கதாபாத்திரத்தை விட லோக்கல் கதாபாத்திரத்தில் தான் கலக்குகிறார். மிக இயல்பாக எந்த சீரியஸும் இல்லாத ஜாலியான ஆர்யாவின் ரியல் கதாபாத்திரம் தான் இதிலும். தீபா சன்னதியை சுற்றி தான் கதையே நகர்கிறது. தம்பி ராமையா, பொன் வண்ணன் எல்லாம் தனக்கே உண்டான ஸ்டைலில் நன்றாக நடித்துள்ளனர். பாடல்களில் பட்டையை கிளப்பியுள்ளார் யுவன். மொத்தத்தில் யட்சன் இன்றைய ட்ரண்டிற்கு என்ன தேவையோ அதை அழகாக எந்த லாஜிக்கும் இல்லாமல் சொல்லியிருக்கிறார் இயக்குனர்.

மொத்தத்தில் திகில் பட ரசிகர்கள் இந்த மாயவனத்துக்கு ஒருமுறை சென்று வரலாம்.






**சிம்பு தேவனின் இயக்கத்தில் வெளியான "புலி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## இருவருக்கும் அது இல்லையாம்


புலி திரைப்படத்தைப் பார்த்த நடிகை தமன்னா தனது ட்விட்டர் பக்கத்தில், ஸ்ருதி நீங்க ரொம்ப அழகு, பிரமாதமாக இருக்கீங்க என்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார். பொதுவாக எந்த நடிகையும் மற்றொரு நடிகையை புகழ மாட்டார்.

கார்த்தி நடிக்கும் தோஸ்த் திரைப்படத்தில் ஸ்ருதி ஒப்பந்தமாகி, அவர் விலகிக் கொண்டதால் இப்போது அந்த வேடத்தில் தமன்னா நடித்து வருகிறார். இப்படியொரு பின்னணியில் இருவரும் ஈகோ இல்லாமல் பாராட்டிக் கொண்டமை ஆச்சரியமடைய வைத்துள்ளது.



## கோபத்தில் சிம்பு "நீ நாயல்ல நரி"

சரத்குமார் அணிக்காக பேசிய சிம்பு மிகவும் கோபமாக விலாசி எடுத்து விட்டார். இதில் இவர் பேசுகையில் 'அந்த இடத்தில் திரையரங்கு வரக்கூடாது என்று சொல்கிறீர்களே, அதற்கு காரணம் கேட்டால் அருகில் பள்ளிக்கூடம் இருக்கின்றது என்கிறார்கள். அது என்ன சாரயக்கடையா? இப்படி பேசுகிறாயே, உன் படத்தை எந்த திரையரங்கில் ரிலிஸ் செய்வாய், ஒன்றாக இருந்த எங்கள் குடும்பத்தை, உன் பதவி ஆசைக்காக பிரித்து, தற்போது நடுத்தெருவிற்கு கொண்டு வந்து விட்டாய்.ராதாரவி அண்ணன் உன்னை நாய் என்று கூறியது தவறு தான், அவர் உன்னை நரி என்று கூறியிருக்க வேண்டும், நீ கிரிக்கெட் அணிக்கு மட்டும் தான் கேப்டன், அதை புரிந்துக்கொள்' என்று விலாசி விட்டார்.



## மீண்டும் தனுஷ் அனிருத் கூட்டணி

தனுஷ் -அனிருத் கூட்டணி என்றாலே ரசிகர்களிடையே பெரும் எதிர்ப்பார்ப்பு இருக்கும். அந்த வகையில் கொலைவெறி பாடல் கிட்டத்தட்ட 10 கோடி பார்வையாளர்களை நெருங்கவிருக்கின்றது. இந்நிலையில் இவர்கள் கூட்டணியில் வெளிவந்த மற்றொரு பாடல் ஒன்று மேலும் ஒரு சாதனை படைத்துள்ளது. அந்த பாடல் வேறு ஏதும் இல்லை, மாரி படத்தில் இடம்பெற்ற 'டானு டானு' என்ற பாடல் தற்போது 1 கோடி பார்வையாளர்களை தாண்டியுள்ளது. சமீபத்தில் தான் 'மெர்சலாயிட்டேன்', 'ஏக் தோ தீன்' பாடல்கள் 1 கோடி பார்வையாளர்களை தாண்டியமை குறிப்பிடத்தக்கது.

## லேடி சூப்பர் ஸ்டார்

என்னுடைய ரசிகர்கள் என்னை "லேடி சூப்பர் ஸ்டார்" என்று என்னை அழைப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். சினிமாவில் உண்மையான சூப்பர் ஸ்டார்கள் நிறைய பேர், என்னைவிட நிறைய சாதித்திருக்கிறார்கள். என்னை ரசிகர்கள் எப்போதும் ஸ்வீட்டி, அனுஷ்கா என்று அழைப்பதை நான் விரும்புகிறேன் என்றார்.

அனுஷ்கா நடிப்பில் தமிழ், தெலுங்கில் உருவாகியுள்ள "ருத்ரமாதேவி" திரைப்படம் எதிர்வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி தெலுங்கில் வெளியாகவிருக்கிறமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## புதிய வகை சிப் உருவாக்கம்


செயற்கை நுண்ணறிவு (Artificial Intelegence) எனப்படும் ஐந்தாம் தலைமுறைக் கணனிகள் தற்போது படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இக் கணினிகளில் தரவுகள் சேமிக்கப்படும் முறையானது போட்டோன்களை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது. இவ்வாறான கணினி தொழில்நுட்பமானது Quantum Computing என அழைக்கப்படுகின்றது. தற்போது இக் கணினிக்கு தேவையான குவாண்டம் தர்க்க வாயிலை (Quantum Logic Gate) சிலிக்கனைப் பயன்படுத்தி அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். சம காலத்தில் பாவனையில் உள்ள கணினிகளில் 0>1 என்ற பிட்களின் அடிப்படையில் தரவுப் பரிமாற்றம் இடம்பெறும். அதேபோன்று குவாண்டம் தர்க்க வாயிலில் குறித்த எண்கள் கியூபிட்ஸ் (Qubits) என அழைக்கப்படுகின்றன. இதேவேளை குறித்த பொறியியலாளர் குழுவானது ட்ரான்ஸ்சிஸ்டர்கள் (Transistors) எனப்படும் குறைகடத்திகளை உள்ளடக்கிய சிப்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.



## DSLR கமெராக்களை விடவும் துல்லியம் வாய்ந்த iPhone 6S

தற்போது பாவனையிலுள்ள கமெராக்களில் DSLR (Digital Single-Lens Reflex) கமெராக்களே அதிக வினைத்திறன் உடையதாகவும். துல்லியம் வாய்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. எனினும் அண்மையில் அப்பிள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட iPhone 6S கைப்பேசியிலுள்ள கமெராவானது Nikon D750 DSLR கமெராவினை விடவும் வினைத்திறன் வாய்ந்ததாக காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பிள் நிறுவனம் முதன் முறையாக 12 மெகாபிக்சல்களைக் கொண்ட கமெராவினை இப் புதிய ஸ்மார்ட் கைப்பேசியில் அறிமுகம் செய்துள்ளது. இக்கமெராவனது 4K மற்றும் 1080 Pixel உடைய வீடியோ பதிவுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

## காளானில் மின்கலம் உருவாக்கி ஆராய்ச்சியாளர்கள் சாதனை




Portabellas எனும் காளானை அடிப்படையாகக் கொண்டு புதிய வகை லிதியம் அயன் மின்கலத்தினை உருவாக்கி அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சாதனை படைத்துள்ளனர். கைப்பேசிகளில் நீண்ட நேரம் மின்சக்தியை வழங்குவதற்கு இம் மின்கலத்தினைப் பயன்படுத்தக்கூடிதாக இருக்கும் எனவும், குறுகிய காலத்தில் இம் மின்கலங்களுக்கான கேள்வி அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது. அதுமட்டுமின்றி 2020ம் ஆண்டளவில் 6 மில்லியன் வரையான வாகனங்களில் இம்மின்கலங்கள் பயன்படுத்தப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## Wove Band அன்ரொயிட் கைப்பட்டி

OTI...



ஸ் ... தொழில்நு ... ன அடிப்பு ... கொண்ட ... ஒன்றினை ... Band நி ... அறிமு ... செய்கின்றது.

அன்ரோயிட் இயங்குதளத்தினைக் கொண்ட இக்கைப்பட்டியானது 1024 x 200 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளது. மேலும் இதில் 1 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய ARM Cortex-A7 Processor, பிரதான நினைவகமாக 512MB RAM என்பனவற்றுடன் 4GB சேமிப்பு நினைவகமும் தரப்பட்டுள்ளது. இச் சாதனத்தில் காணப்படும் விசேட தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாத போதிலும் குசைளவ Look வீடியோ ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

## இலவச இணைய சேவை


இணைய வசதி இல்லாத ஆப்ரிக்க மக்களுக்கு பேஸ்புக் நிறுவனம் அதிரடி திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

அதன்படி, பேஸ்புக் நிறுவனத்தின் “இண்டர்நெட் டாட் ஆர்க்" திட்டத்தின் ஒருபகுதியாக இணைய வசதி இல்லாத பகுதிகள், இணையத்தின் வேகம் மிக குறைவாக உள்ள பகுதிகளில் “அமோஸ்-6" செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இணையச்சேவையின் மூலம் இணையச் சேவைகள் இங்குள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## எழுத்துருக்களாக்கும் கையுறை

கை அசைவுகளை அல்லது சைகைகளை எழுத்துருக்களாகவும், ஒலி வடிவமாகவும் மாற்றக்கூடிய அதிநவீன இலத்திரனியல் கையுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஐந்து சென்சார்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கையுறையானது மெல்லியதாகவும், பாரம் குறைந்ததாகவும், விரைவாகச் செயற்படக்கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் இதனை Wi-Fi- இணைப்பின் ஊடாக ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் என்பவற்றுடன் இணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.




## COMPUTER TIPS

கணினி பயன்பாட்டில் உள்ளபோது நீங்கள் வெளியே செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.அப்பொழுது நீங்கள் கணினியை நிறுத்த முடியாத வகையில் பயன்பாட்டில் இருக்கலாம் அல்லது பதிவிறக்கம் மற்றும் வைரஸ் ஸ்கேன் நிகழ்வு நடைபெற்று கொண்டிருக்கலாம்.இப்பொழுது உங்கள் தேவையானது அந்த செயல்பாடு முடிந்தவுடன் கணினி தானாகவே நிறுத்தப்பட வேண்டும் என்பதுதானே..இது மாதிரியான இக்கட்டான சூழ்நிலையில் இத்தகவல் உங்களுக்கு பயன்படும் என நம்புகிறேன்.

Go to Start and type Task Schedule in run dialog box and press Enter

Click on Action and then Create Basic Task.




### தானாகவே SHUT DOWN செய்வது எப்படி?


இங்கே உள்ள name என்ற இடத்தில் எதாவது ஒரு தகவலை கொடுத்துவிட்டு next button! கிளிக் செய்யவும்.

உங்களுக்கு தேவையான கால அளவை (delay time) இங்கே பதிவு செய்தவுடன் அடுத்த தகவலுக்கு செல்லவும்.

Now select Start a Program and click on Next button.

Browse the program which you want to execute and click on next button. For Shutdown Copy/Paste this location.

After this click on Finish button.




## HTML தமிழில்....

நான் எழுதி <title></title, குறிஒட்டிற்குள் எழுதிய Welcome to webpage என்பது தலைப்பு பகுதியிலும், <body></body, என்னும் குறிஒட்டிற்குள் எழுதிய வாக்கியம் வலைப்பக்கத்திலும் தெரிவதைக் கவனியுங்கள்..

இவ்வாறு ஒரு முழு HTML நிரல் வரிகளை எழுதி மேற்குறிப்பிட்ட வகையில் .html என்னும் விரிவுடன் சேமித்து, அதை வலைஉலவியில் திறந்து சோதனை செய்துகொள்ளலாம்.

தொடர்ச்சியாக ஒரு HTML ஆவணம் தயாரிக்கும்போது முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியவை:

1. HTML ஆவணம் <HTML, மற்றும் </HTML, என்னும் குறி ஒட்டுகளுக்கு இடையில் இருக்க வேண்டும்.

2. <TITLE, மற்றும் </TITLE, என்னும் குறி ஒட்டுகள்

### சேமிப்பும் சேமித்ததை திறத்தலும்

<HEAD, மற்றும் </HEAD, என்னும் குறிஒட்டுக்கு இடையில் இருக்க வேண்டும்.

3. <BODY, மற்றும் </BODY, என்னும் குறி ஒட்டுகள் </HEAD, என்னும் குறிஒட்டிற்குப் பின்னர்தான் எழுதப்பட வேண்டும்.

4. மற்ற அனைத்து குறிஒட்டுகளும் <BODY, மற்றும் </BODY, என்னும் குறிஒட்டுகளுக்கு இடையில் இருக்க வேண்டும்.

5. அனைத்து HTML ஆவணங்களும் ".htm" அல்லது ".html" என்னும் விரிவுடன் (Extension) இருக்க வேண்டும்.

6. <, என்ற குறியீடுகளுக்கு இடையில் தொடக்க குறிஒட்டு (Tag) ஆகும்.

7. </, என்ற குறியீடுகளுக்கு இடையில் முடிவுக் குறிஒட்டு (Tag) ஆகும்.

அதாவது ஒரு ஓவியம் வரையும்போது முதலில் கோடுகளால் வரைந்து விட்டுப் பிறகு அவ்வோவியத்திற்கு நிழல் (Shadow), மற்றும் விரும்பிய வண்ணங்கலவைக் கொண்டு மாற்றி அமைப்பது போலவே நமது HTML ஆவணத்தையும் வடிவூட்டலாம்.

ஹெச்.டி.எம்.எல் ஆவணத்தை கவர்ச்சிகரமாகக் காட்ட HTML-ல் பல குறிஒட்டுகள் (TAGS) உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி ஒரு ஆவணத்திலுள்ள உரையை அழகுப்படுத்துவதுடன், அதில் படங்களையும், வண்ணங்களையும், ஒலிகளையும், காணொளிகளையும் சேர்க்கலாம்.

**நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அவள் வித்தியாசமானவள்



– திருமலை. வீ. என். சந்திரகாந்தி –

அவள் அடுத்த வீட்டு பெண்தான். ஆனால், படு சுட்டி. தான் நினைத்ததை சாதிக்கும் திறன் அவளுக்கு எப்படி கைகூடுகின்றது என்பதை பற்றி நான் ஆச்சரியப்படாத நாட்களே இல்லை.
காலையில் நான் அலுலவகம் செல்ல புறப்பட்ட போது அவளது வீட்டு வாசலில் எனக்காக காவலிருந்தவள், 'குட்மோர்னிங் அங்கிள்' என்று கூறியபடி துள்ளிக்குதித்து வந்தாள். 'ஸ்கூட்டரை ஸ்ரார்ட்' செய்வதை விடுத்து, 'குட்மோர்னிங்,' இன்றைக்கு என்ன திட்டம்?' என்று வினவினேன்.
மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள் அவளுடைய அழகும் நிறமும், இளமையும் குழந்தை தனமும் அவளுடைய வெற்றிகளுக்கெல்லாம் காரணம் என்பது பட்டெனத் தெரிந்தது.
'அங்கிள்' இன்றைக்கு எங்கள் பாடசாலையில் இல்லவிளையாட்டு போட்டி. நான் இருநூறு மீற்றர் ஓட்ட போட்டியில் முதலாம் இடத்தை பிடிக்கப்போகிறேன். நீங்கள் கட்டாயம் வந்து பார்க்கவேண்டும்.
எனக்கு சிரிப்புத்தான் வந்தது. உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்ற போகும் போட்டி. அதிலும் அந்த பாடசாலை சென்ற வருடம் இருநூறு மீற்றர் போட்டியில் அகில இலங்கை சாதனையை முறியடித்திருந்தது. எனது ஆச்சரியத்தை மறைத்தபடி, 'நீதான் கட்டாயம் வெற்றி பெறுவாய்...' என்று வாழ்த்தி வீட்டு விடை பெற்றேன்.
ஜனனி என்றால் எங்கள் வீட்டில் மனைவி, பிள்ளைகள் அனைவருக்குமே நன்கு பிடிக்கும். உரிமை எடுத்து உள்வீட்டு பிள்ளைபோல பழகுவாள். எப்போதுமே மிகுந்து நிற்கும் துடுக்குத்தனத்தால் எல்லோரையும் எப்போதுமே மகிழ்ச்சியாக வைத்திருப்பாள்.
அவளது பிஞ்சு மனத்தை நோகடிக்கக் கூடாதென்பதற்காகவே நான் எனது சிரமங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவளுக்காக எதையும் செய்வேன்.
அன்றொருநாள் என்னிடம் ஓடிவந்தாள். 'அங்கிள்.... அங்கிள்... நாங்கள் எங்கள் பாடசாலை நிதிக்காக அதிஷ்டலாச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தப் போகின்றோம். நீங்கள் தான் என்னிடமிருந்து முதலாவது சீட்டை வாங்கவேண்டும்' என்று கூறி பிடிவாதம் பிடித்தாள்.
நானும் இரண்டு சீட்டுக்களை பெயரெழுதி எடுத்தேன். அவளால் மகிழ்ச்சியை தாங்க முடியல்லை. 'அங்கிள்... இந்த சீட்டு விற்பனையில் யார் அதிகம் சீட்டுக்களை விற்கிறார்களோ, அவர்களுக்கும் பரிசு கொடுக்கவிருக்கிறார்கள். அந்த பாரிசு எனக்குத்தான்' என்று கூறி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.
சில நாட்களின் பின் மீண்டும் ஓடி வந்தாள். 'அங்கிள்... எனக்கு சீட்டு விற்பனையில் பரிசு கிடைத்துவிட்டது.' எனக்கூறி குதூகலித்தாள். எப்படி இவளுக்கு சாத்தியமானது? என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தாலும் 'சீட்டு விற்பனைக்கு பொறுப்பான ஆசிரியை உனக்கு உதவியிருப்பாள்' என்று கூறிக் கேலி செய்தேன்.
"இல்லை அங்கிள்... பாடசாலை மட்டத்தில் ஒரு ஆசிரியை அப்படியெல்லாம் பக்கசார்பாக நடக்கமாட்டார். சீட்டுக்கள் விற்பனைக்கு ஒவ்வொரு மாணவிக்கும் இருபத்தைந்து சீட்டுக்கள் கொண்ட ஐந்து புத்தகங்கள் வழங்கப்பட்டன. உண்மையில் இது அவர்களுக்கு பெரியதொரு சுமை என்பது அவர்களது பேச்சில் இருந்து புரிந்தது. எதற்கும் பரிசு என்பது நிச்சயமாக இருக்கட்டுமே என்பதற்காக நான் ஒருவருமறியாமல் ஆசிரியையிடம் இன்னொரு புத்தகத்தை பெற்று அதிலும் பல சீட்டுக்களை விற்றுவிட்டேன். அதனால் எனக்கு பரிசு நிச்சயமாயிற்று!' என விளக்கினாள். இப்படியே....' இவள் ஏன் எனக்குப் பிள்ளையாக இருந்திருக்க கூடாது?' என்று எனது மனம் பரிதவித்து ஏங்கும் வண்ணம் சாதனைகள் பல புரிவாள்.
இன்று ஓட்டபந்தயத்தில் முதலிடம் பெறப்போவதாக சலஞ்ச் செய்துவிட்டு அமைதியாக போய்விட்டாள். எனது மனமோ, 'கடவுளே! ஜனனிக்குத்தான் முதலிடம் கிடைக்கவேண்டும்' என்று பலமாக பிரார்த்தித்துக்கொண்டது.
மாலையில் இறுதிப்போட்டிகள் ஆரம்பிக்கும் நேரத்திற்கு மைதானத்திற்கு போய் விட்டேன். சில போட்டிகள் நடைபெற்றன. சில மாணவிகள் அடுத்தடுத்த போட்டிகளுக்கு தாயார்படுத்திக்-கொண்டிருந்தார்கள். ஜனனியை மட்டும் காணவில்லை.
ஜனனி விளையாட்டு போட்டிகளில் அதிக ஆர்வம் காட்டுபவளல்ல. படிப்பும், பரீட்சையுமென்றுதான் கவனமெடுப்பாள். எப்படி 'ரிஸ்க்' எடுத்து இந்த போட்டியில் கால் வைத்தாள் என்று ஆச்சரியமாக இருந்தது. ஒலி பெருக்கியில் இருநூறு மீற்றர் இறுதிப்போட்டிக்கான அறிவித்தலில் ஜனனியின் பெயரும் பங்குபற்றுவோரின் பெயர் பட்டியலில் வாசிக்கப்பட்டது. ஓட்டப்போட்டிக்கான வெள்ளைச் சீருடையில் ஜனனி நம்பிக்கையுடன் ஓடி வந்தாள். போட்டி ஆரம்பமாகியது. எனது மனமோ ஒரு நிலையிலில்லை. 'காளித்தாயே ஜனனி தோற்றுவிடக்கூடாது... உனக்கு ஒரு அர்ச்சனை. அவள் வென்று விட வேண்டும்.' என வேண்டிக் கொண்டேன்.
போட்டி ஆரம்பிக்கப்பட்ட போது. ஜனனியின் ஆரம்பம் தடுமாற்றமாக இருந்தது. ஆனால், 'ஸ்ரெப்ஸ்' அகன்றவையாக இருந்தன. அவளது வளமான உடல்நிலை கால்களின் வலுவில் தெரிந்தது. படிப்படியாக ஒவ்வொருவரையும் பின் தள்ளினாள். நாலாமிடம் ... மூன்றாமிடம் ... இரண்டாமிடம்தான் என்று எல்லோரும் எண்ணியிருந்த சமயம் அவளது மனவலு ஒரு மயிரிழையில் அவளை முதல் நிலைப்படுத்தியது.!
அவளது இல்ல மாணவ மாணவிகளுடன் இணைந்து நானும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தேன். நான் அமர்ந்திருந்த இடத்தை துல்லியமாகக்கண்டுபிடித்து எனக்கு கையசைத்தபடி தனது இல்லத்திற்குள் ஓடி மறைந்தாள்.
இரவு நான் ஓய்வாக எனது மேசையில் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்தேன்.
'அங்கிள்...' என்று அழைத்தபடி ஜனனி ஓடி வந்து எனக்கெதிராக அமர்ந்தாள்.
'ஜனனி... உன்னால் இது எப்படி சாத்தியமாகிறது?' என்று ஆச்சரியப்பட்டு வினவினேன்.
'அங்கிள்... இந்தப் போட்டியில் நான் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகப் பயிற்சி என்று எதுவும் செய்யவில்லை. இந்தப் போட்டிகளுக்கான பயிற்சிகள் மைதானத்தில் நடந்தபோது நான் எதேச்சையாக அங்கு நின்றேன். எனது நண்பி ஒருத்தி சென்ற ஆண்டு சாதனை நிலைநாட்டிய மாணவியை எட்டிப்பிடித்து வேகமாக ஓடினாள். பின்னர் அதே நண்பி என்னைத் தனக்குத் துணையாகப் பயிற்சிகளில் ஈடுபடக் கேட்டபோது நானும் அவளுடன் சேர்ந்து ஓடினேன். அப்போதுதான் என்னிடமிருந்த ஓட்டத்திறமை வெளிப்பட்டது. எனது நண்பியால் என்னை நெருங்கக்கூட முடியவில்லை. இதை வைத்து கணக்கு போட்டேன். வெற்றியும் பெற்றேன்.'
எனது மனைவி அருகிலிருந்து சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்தவள் திடீரென ஜனனியிடம்.
'ஜனனி, நீங்கள் படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி வேறு ` எந்த துறையிலும் சரி தனித்துவமான முறையில் வெற்றியை பெறுகிறீர்கள். அப்படியே உங்களுக்கு எதிர்காலத்தில் அவசியமான வாழ்க்கைத் துணையைப் பெறும் விஷயத்திலும் நீங்கள் ஏதாவது தனித்துவத்தைக் காட்டி வெற்றி பெறுவீர்களா?' என கேட்டேவிட்டாள்!
ஜனனி ஒரு கணம் கூச்சத்துடன் தலையைத் தாழ்த்திக்கொண்டவள்... பின்னர் நிமிர்ந்து...
'அன்ரி... எனக்கு வரவேண்டிய... நான் விரும்புகின்ற துணைவன்... பெற்றோருக்கு கட்டுப்பட்டு, அவர்களுடைய சொற்கேட்டு நடக்கும் ஒருவனாக இருக்க வேண்டும். அப்படி பார்த்தால் எனக்கு ஒரு பையனை பிடித்துக்கொண்டால், நான் அவனுடைய பெற்றோருடைய அன்பைத்தான் முதலில் பெறுவேன்!' என்று கூறி எங்களிருவரையும் நம்பிக்கையுடன் பார்த்துச் சிரித்தாள்.
கேள்வி கேட்ட எனது மனைவி முகத்தில் 'சரியா?' என்ற கேள்விக்குறியோடு என்னைப் பார்த்தாள்.
நானும் 'சரி' என்ற பதில் விளங்கத் தலையாட்டினேன்.
எங்களுடைய மகன் எங்கள் சொல்லை தட்ட மாட்டான்!

# உயிர்த்திருந்தாலன்றி உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அப்போது அவரின் முன்வீட்டில் வசிப்பவர் வந்தார். அவரும் இவரது மாணவர். என்ன சேர்.. இண்டைக்கு பெரிய சத்தமாய் இருக்கிறது, சந்தோசமாய் இருக்கிறீங்க போல என்றார் அவர்.
எனது முக்கிய மாணவர்களில் ஒருவன் நோர்வேயில் இருந்து வந்திருக்கிறான். அவனுடன் பேசும்போது நான் உயிர்க்கிறேன். இன்றும் அப்படித்தான் என்றார் ஆங்கிலத்தில். எத்தனை பெரிய வார்த்தைகள் அவை. நெஞ்சு விம்மி, கண்கள் கலங்கின. அதை அவர் கவனித்திருக்கவேண்டும். உண்மைதான் சஞ்சயன் உன்னுடன் கதைப்பது மனதுக்கு ஆறுதல் தரும் என்றார். நான் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

எனது வாழ்க்கை இப்படியான சில பொழுதுகளில் மிக மிக அழகாகவிருக்கிறது.
8 மணிபோல் அவரைச் சந்தித்தபோது சிற்றூண்டியுடன் காத்திருந்தார், மனிதர். அதற்கிடையில் பழைய மாணவர் சங்கத்தலைவரையும் அழைத்து அறிமுகப்படுத்தினார். அடுத்தவருடம் பாடசாலையின் 200வது ஆண்டு நிறைவுவிழா. மிகச்சிறப்பாக நடாத்தவேண்டும் என்றார். இன்றும் பாடசாலையின் நினைவுகளிலேயே அவரின் அதிக நேரங்கள் கழிகின்றன என்பதை அறியக்கூடியதாய் இருந்தது.
அனைவரும் சென்ற பின் உன்னிடம் ஒரு விடயம் கேட்கவேண்டும், நான் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் தலைமைப்பதவியை ராஜனாமா செய்யவேண்டும் என்று பலரிடம் சொல்லித்திரிந்தாயாமே என்றார். ஆம். நீங்கள் கூறுவதில் சற்று உண்மையிருக்கிறது. உனக்கு உன் கருத்தை வெளியிட முழு உரிமையும் இருக்கிறது. அதை நான் மதிக்கிறேன். ஆனாலும் அதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன் என்றார். பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தில் இருந்த இழுபறி நிலமைகள் பற்றி நான் வைத்திருந்த கருத்துக்களையும், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக உங்களை தலைமைப்பதவியை தவிர்த்து பழையமாணவர் சங்கத்தின் அதியுயர் மேலாளராக இயங்கும் படியுமே நான் கூறியிருந்தேன் என்றேன். தற்போது உன்னைப் புரிந்து கொள்கிறேன் என்றார். எனது மனம் பெரும் ஆறுதலை உணர்ந்து கொண்டிருந்தது.
பேராசானுக்கு உதவியாய் இரவுப்பொழுதுகளில் தங்கும் ஒருவர் வந்தார். அவர் கையில் எனது படுவான்கரை புத்தகம் இருந்தது.
இது உங்களுக்கு எப்படிக்கிடைத்தது என்றேன் அவரிடம். அய்யா தந்தார் என்றார்.
இவர் படுவான்கரையைச் சேர்ந்தவர். நீ உண்மை எழுதியிருக்கிறாயா என்று பார்ப்பதற்காக அவரிடம் கொடுத்திருக்கிறன் என்றார் பேராசான்
எப்படி எழுதியிருக்கிறான் என்றார் அவரின் உதவியாளரை நோக்கி.
உண்மையை பயமில்லாமல் எழுதியிருக்கிறார் என்றார் அவர்.
என்னட்ட படிச்சவன் அவன். வேற என்னத்தை எழுதுவான் என்று வெடித்துச் சிரித்தார்:
நான் பெருமையில் மிதந்துகொண்டிருந்தேன்.
மறுநாள் காலை மீண்டும் வருவதாய்க் கூறிப் புறப்பட்டேன். இரவு முழுவதும் எனது மனம் அவரையே நினைத்துக்கொண்டிருந்தது. கடந்த வருடம் மட்டக்களப்பில் தங்கியிருந்து படுவான்கரை புத்தகத்திற்கான தகவல்களை திரட்டியபோது அறிமுகமானார் ஒரு முன்னாள் போராளி. ஒரு காலை முற்றாக இழந்தவர். இரு குழந்தைகள், மனைவி, தாயார் என அவரின் குடும்பம் இருந்தது. வறுமையில் அடிபட்டுப்போயிருந்தார்.
அவருக்கு அறிமுகமாகிய ஒரு தொழிலுக்கு முதலீடாக 70.000 இலங்கை ரூபாய் பெறுமதியான ஒரு இயந்திரம் வழங்கியிருந்தேன். இன்று அவர் வறுமையில் இருந்து மீண்டு, ஒரு ஆட்டோ, சிறு தொழிற்சாலை ஆகியவற்றின் உரிமையாளராக முன்னேறியிருக்கிறார். அவரை நினைத்து நான் பெருமைப்படுவதுண்டு.
மறுநாள் அவரை அழைத்து எனது பேராசானிடம் அறிமுகப்படுத்தினேன். சற்றுநேரத்தின் பின் அவர் விடை பெற்றுக்கொண்டார்.
அவர் விடைபெற்றதும், ஆங்கிலத்தில் My son என்றழைத்த போது அவர் குரல் தழுதளுத்திருந்தது. ஒரு இருதயமில்லாதனவைப்போல் எனது மாணவர்களை நான் கண்டித்திருக்கிறேன், அடித்திருக்கிறேன், நீயும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் இன்று எனது அந்திமக்-காலத்தில் என்னை நீங்கள் உயிர்ப்பித்துக்-கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வது? என்றார்.
எனக்கு நீ, லட்சம் லட்சமாக பணம் தந்திருந்தாலும் இன்று நீ செய்த செயல் அதற்கீடாகாது. எனது வழிகாட்டிகள் சங்கத்தின் பலாபலன்களை நான் 30 ஆண்டுகளின் பின்பும் கண்டுகொண்டிருக்கிறேன். ஒரு ஆசிரியனுக்கு இதை விட வேறு என்ன பெருமை இருக்கமுடியும். உன்னால் எங்கள் பாடசாலைக்குப் பெருமை, எனக்குப் பெருமை என்றார். நான் பேசும் நிலையில் இருக்கவில்லை. மங்கலாகத் தெரிந்துகொண்டிருந்தார் எனது பேராசான், கலங்கிய கண்களினூடே.
சமுதாயம் எங்கே சென்றுகொண்டிருக்கிறது என்று என்னைப்பார்த்துக்கேட்டார். அவரைப்போன்று என்னிடமும் அதற்கான பதில் இருக்கவில்லை.
மகன். வாழ்க்கை, என்னை பாலைவனங்களுக்குள்ளாலும், ரோஜாத் தோட்டங்களினுள்ளாலும் அழைத்துப் போயிருக்கிறது. ஒரு ஆசிரியனாய் என் வாழ்க்கை கழிந்ததையிட்டு பெருமைப்படுகிறேன். எனதருமை மாணவனே! கர்த்தர் உன்னையும் உன் குடும்பத்தையும் ரட்சிப்பாராக என்றார்.
"உயிர்த்திருந்தாலன்றி உயிர்வாழ்வதில் அர்த்தமில்லை" என்று கூறி, புரிகிறதா என்றார். அவர் கைகளை அழுத்தியபடியே புரிகிறது சேர், மிக நன்றாகப் புரிகிறது என்றேன்.

முற்றும்....

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமையல் சமையல்

## மட்டன் பிரியாணி

**தேவையான பொருட்கள்**

மட்டன் - 400 கிராம், அரிசி -3 கப் (பாஸ்மதி அரசி), பெரிய வெங்காயம் -2, தக்காளி-2, பச்சை மிளகாய் -4, தனி மிளகாய் தூள் - ½ கரண்டி, பிரியாணி தூள் அல்லது கரம் மசாலா தூள் - ½ கரண்டி, கசகசா - ½ தே.கரண்டி, பூண்டு - 6 பல், இஞ்சி – சிறிதளவு, புதினா – சிறிதளவு, கொத்தமல்லி தழை – சிறிதளவு, தேங்காய் - ½மூடி, எலுமிச்சை பழம் - பாதி, எண்ணெய் அல்லது பட்டர் - 2 கரண்டி, கிராம்பு - 3, பட்டை - 2, பிரியாணி இலை - 2, ஏலக்காய் - 5, முந்திரி பருப்பு – 5

தாளிக்க வேண்டிய பொருட்கள் : கிராம்பு பட்டை ஏலக்காய் பிரியாணி இலை முந்திரி பருப்பு



### செய்முறை

முதலில் வெங்காயம், தக்காளி, இஞ்சி, பூண்டு அரிந்து கொள்ளவும். பச்சை மிளகாயை நீள வாட்டில் அரிந்து கொள்ளவும். தேங்காயுடன் கசகசாவையும் அரைத்து பால் எடுத்து கொள்ளவும். இஞ்சி, பூண்டு சேர்த்து அரைத்து கொள்ளவும். பின்பு ஒரு பாத்திரத்தில் பாஸ்மதி அரிசி முக்கால் பாகம் வேக வைத்து தனியாக எடுத்து வைத்து கொள்ளவும்.

கனமான ஒரு பாத்திரத்தில் பட்டர் அல்லது எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் தாளிக்க வைத்துள்ள பொருட்களைப் போட்டு தாளித்து வெங்காயம் சேர்த்து வதக்கவும். பின் இஞ்சி பூண்டு விழுது, தக்காளி, பச்சை மிளகாய், புதினா கொத்தமல்லி, தூள் வகைகள் மிளகாய் தூள் மற்றும் கரம் மசாலா தூள் இவை அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து நன்றாக வதக்கவும். பின்பு 2 கப் தண்ணீருடன் மட்டனையும் சேர்த்து 30 நிமிடம் வேக வைத்து மட்டன் மசாலாவை தயார் செய்து வைத்து கொள்ளவும்.

கடைசியில் முக்கால் பாகம் வெந்த சாதத்துடன் வேக வைத்த மட்டன் மசாலா கலவையுடன் சேர்த்து அடுப்பை சிறிதளவாக வைத்து 10 நிமிடம் வேக விடவும். சிறிது கொத்தமல்லி தழையை மேலே தூவி 2 முறை கிளறி விட்டால்.. தயாராகிவிட்டது சுவையான மட்டன் பிரியாணி

## டிசைன்ஸ்



## ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சூப்



நோயின்றி ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சத்தான உணவு வகைகளும், சீரான உடற்பயிற்சியும் அவசியம். ஆனால் இன்றைய அவசர காலகட்டத்தில் சத்தான உணவுகளை உட்கொள்கிறோமா என்று கேட்டால் அது கேள்விக்குறி தான்.

✓ 50 முதல் 75 கிராம் முடக்கத்தான் இலை, முடக்கத்தான் பொடி மூன்று தே.கரண்டி எடுத்து நன்றாக நறுக்கி தண்ணீர் விட்டு வேகவிடவும். இதில் வெங்காயம், தக்காளி, காரட், பீன்ஸ், கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை, புதினா, பூண்டு, இஞ்சி சேர்த்து, மிளகுத்தூள், சீரகத்தூள் கலந்து கொதிக்கவிட்டு மசிக்கவும். இதனை தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வந்தால் சர்க்கரை நோய், வயிற்றுப்புண், மூட்டுவலி மற்றும் பக்கவாதம் குணமடையும்.

✓ பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட வல்லாரை கீரையுடன் தேவையான காய்கறிகள் சேர்த்து சூப் செய்து குடிக்கலாம், இதேபோன்று பொன்னாங்கன்னி கீரையையும், முருங்கை கீரையையும் செய்து சாப்பிடலாம். இதன் மூலம் நினைவாற்றல் அதிகரிப்பதுடன் கண் சம்பந்தமான நோய்கள் சரியாகும், எலும்புகள் வலுப்பெறும்.



✓ இதேபோன்று துளசி அல்லது துளசி பொடியை நீர் சேர்த்து, தேவையான அளவு காய்கறிகள் சேர்த்து சூப் செய்து குடிக்கலாம். இவ்வாறு குடித்தால் ஆஸ்துமா நோய் சரியாகும், சளி- இருமல் இருக்காது.

## அழகு குறிப்பு



## பொலிவான அழகு முகம் கிடைக்கக்கடவது.....

பெண்களை அழகாக காட்டுவது முகத்தில் உள்ள அவர்களது ஒவ்வொரு பாகங்களும்தான். முகம் அழகாக இருந்தாலே, உடம்பையும் அழகாக காட்டும்.

### 1. முக அலங்காரம்

பாலாடை அகற்றிய பால், சிறிய துண்டு பப்பாளிப்பழம், ஓட்ஸ் பௌடர் ஆகிய மூன்றையும் குழைத்து முகத்தில் பூசி ஒரு மணிநேரம் கழித்து, இந்த கலவை முகத்தில் படிந்து ஒரு இறுக்கத்தைக் கொடுக்கும் அதன் பின்னால், முகத்தை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். பின்னர், ஒரு தேக்கரண்டி தயிருடன் அரை தேக்கரண்டி எலுமிச்சை சாறும் கலந்து முகத்தில் பூசி அது காய்ந்ததும் கழுவிவிடலாம். மேலும், கடலை மாவில் ஒரு தேக்கரண்டி ரோஸ் வாட்டரும் ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவிய பின்பு 20 நிமிடங்கள் கழித்து அதைக் கழுவிவிடலாம். மேலும் உழுந்தை நன்றாக அரைத்து அத்துடன் சம அளவு பால் மற்றும் தேன் கலந்து பசை போலாக்கி முகத்தில் தடவுவதும், சிறந்த பேஸ்பேக் முறை ஆகும்.

### 2. கால், பாதங்களுக்கு மென்மையும் பொலிவும் ஏற்பட:



ஐந்து மேசைக்கரண்டி ரவையை நீரில் குழைத்து கால் மற்றும் பாதங்களில் தடவியபின், 30 நிமிடம் கழித்து கழுவிவிடவும். ஆறு கரண்டி பெட்ரோலியம் ஜெல்லியுடன் இரண்டு கரண்டி கிளிஸரின், இரண்டு கரண்டி எலுமிச்சை சாறு ஆகியவை கலந்து இரு வாரங்களுக்கு ஒருமுறை கால்களில் தடவி அரை மணி நேரம் சென்றதும் கழுவி விடலாம்.

### 3. கண்ணைச் சுற்றியுள்ள கருவளையம் நீங்க:



குளிர்ந்த பாலில் பஞ்சை நனைத்து கண்ணிமைக்கு மேலாக வைத்து அரை மணி நேரம் ஓய்வெடுக்கவும். பின்பு தேங்காய்ப் பாலினைத் தொட்டு உங்கள் மோதிர விரலால், கண்ணைச் சுற்றி மஸாஜ் செய்யவும்.

### 4. முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்க:

எட்டு பாதாம் பருப்புகளை வெதுவெதுப்பான நீரில், இரவு ஊற வைத்து, மறுநாள் காலை அதை அரைத்து, ஒரு தேக்கரண்டி பாலுடன் கலந்து முகத்தில் பூசினால், கரும்புள்ளிகள் மறையும். மிகவும் வறண்ட சருமம் உடையவர்களுக்கு பாதாம் மாஸ்க் நல்லது.

### 4. உடலில் நறுமணம் வீச



கடுக்காய்த் தோல், லோத்திரப் பட்டை, வேப்பம் பட்டை, ஏழிலம்பாலைப்பட்டை, மாதுளம்-பட்டை இவற்றை மிகவும் நுண்ணிய தூளாக்கிக் கொள்ளவும். இந்தத் தூளுடன் சந்தனத் தூள் மற்றும் முக பவுடர் கலந்து வைத்துக் கொண்டு பூசிவர பெண்களுக்கு ஏற்படும் உடல் நாற்றம் மறைந்து உடல் கமகமக்கும்.

அக்குள் நாற்றம் மறைய

அக்குள் நாற்றம் மறைய கடுக்காய், வில்வம்பழச்சதை, கோரைக்கிழங்கு, இவற்றைத் தூளாக்கி தண்ணீரில் குழைத்து அக்குள் பகுதியில் பூசிய பின் குளிக்க அங்குள்ள கெட்ட மணம் மறையும். ஆயுர்வேத மருந்துகளில் ஏலாதி சூரணம் பாசிப்பயறுடன் கலந்து தேய்த்துக் குளிக்கப் பயன்படுத்தலாம்.




## புராதன கதை குழந்தை

எகிப்து நாட்டின் மென்பெல்லாவெய்ன் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் பிறந்த இக்குழந்தை, அந்நாட்டின் புராண கதைகளில் வருவது போன்ற முகத்தோற்றத்துடன் ஒற்றைக்கண் மற்றும் மூக்கு இல்லாமல் பிறந்துள்ளது.

## எதிர்பாராத தீர்ப்பு

## இப்படியும் நடக்கலாம்

சவுதி அரேபியாவில் நாட்டில் பணக்கார குடும்பம் ஒன்றில் தனது கணவர் பணிப்பெண்ணிடம் தகாத முறையில் நடந்துகொள்வதாக சந்தேகப்பட்ட அவரது மனைவி மறைத்து வைத்திருந்த கமெரா மூலம் தனது கணவனின் லீலைகளை படம் பிடித்துள்ளார்.

கணவரின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்த நிலையில், அவருக்கு தண்டனை பெற்று தர வேண்டும் என தீர்மானித்த மனைவி அந்த வீடியோவை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். ஆனாலும் எதிர்பாராதவிதமாக கணவரின் வழக்கறிஞரோ தனது கணவனையே கண்காணித்த குற்றத்திற்காக 'தேசிய தகவல் தொழில்நுட்ப சட்டத்தின்' அடிப்படையில் மனைவிக்கு ஒரு வருட சிறை தண்டனை 87,214 பவுண்ட் அபராதமும் பெற்றுக் கொடுக்கக் கூடிய அளவிற்கு வாதிட்டுள்ளார்.

## இதயத்தை வெளியே எடுத்த மகன்

அமெரிக்காவினை சேர்ந்த நைலா என்பவர் தனது மகன் ஓமர் உடன் வசித்து வந்துள்ளார். இந்நிலையில், நைலாவுக்கும் அவரது மகன் ஓமருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறவே, தனது தாயின் கையில் இருந்த துப்பாக்கியை கீழே தட்டி எடுத்து தன் தாயாரை சுட்டுள்ளார். பின் கத்தியால் தனது தாயாரின் கழுத்திலிருந்து மார்பு பகுதி வரை அறுத்து, இதயத்தை கைகளால் வெளியே எடுத்து போட்டுவிட்டு சென்றுள்ளார். 5 நாட்களின் பின்னர் காவல்துறையினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இவர் [illegible] கொண்டுள்ளார்.

- கனடா நாட்டில் பிறந்த தாயார் ஒருவரின் 2 வயது குழந்தைக்கு அந்நாட்டு அதிகாரிகள் விசா வழங்க மறுத்துள்ளதால், குடும்பத்தை விட்டு பிரிந்து வாழும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக தாயார் வேதனை தெரிவித்துள்ளார்.
- ஜேர்மனியில் வசித்து வந்த 20வயது இளம்பெண் தனது வீட்டுத்தோட்டத்தில் மர்மமான முறையில் பிணமாக கண்டுபிடிக்கப்பட்டார். இவர் இறப்பதற்கு முன்னால் தான் மரணத்திற்காக காத்திருக்கிறேன் என்றும் மிகவும் இளம்வயதில் மரணமடையப்போகிறேன் என குறுஞ்செய்தியாக எழுதி வைத்துள்ளார். அதுமட்டுமின்றி, இவர் ஒலிப்பதிவு நாடாவில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிரியாவில் மூன்று நபர்களால் கடத்தி செல்லப்பட்ட நான், அவர்களால் கற்பழிக்கப்பட்டேன் என்று எனது வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் கருதுகிறார்கள். இந்த சம்பவத்தால், எனது தாயாரும், சதோதரர்களும் என்னை மிகவும் கேவலமாக நடத்தினார்கள் என்றும் நான் இறப்பதற்கு தகுதியானவள் என்று அவர்கள் கருதினார்கள் எனவும் பதிவிடப்பட்டிருந்தது. எனவே தயாரின் கட்டளையின் பேரில் இப்பெண்ணின் சகோதரர்கள் தான் இவரை கொலை செய்திருக்கலாம் என்று காவல்துறையினர் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர்.
- எகிப்தில் இருந்து வந்த சரக்கு விமானத்தில் 7 மணி நேரம் சாகச பயணம் மேற்கொண்ட பூனையை பிரித்தானியா விமான நிலைய அதிகாரிகள் மீட்டு பாதுகாத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







***குழப்பங்கள் நிறைந்த பிரதேசம்***

நபி (ஸல்) அவர்கள் (மதீனாவின்) கிழக்குத் திசையை நோக்கி (ஈராக்கை நோக்கி) சைகை செய்து, இதோ இங்கிருந்தான் குழப்பங்கள் தோன்றும். இதோ இங்கிருந்துதான் ஷைத்தானின் கொம்பு வெளிப்படும் என்று கூறியதைக் கண்டேன் என்று அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி)

யுஸைர் பின் அம்று (ரழி) அவர்கள் ஸஹ்ல் பின் ஹனீ∴ப் (ரழி) அவர்களிடம் கவாரிஜ்கள் பற்றி நபி (ஸல்) அவர்கள் ஏதாவது கூறியது பற்றி நீங்கள் செவிமடுத்தீர்களா எனக் கேட்டார்கள். அவர்கள் ஈராக் நகர் பக்கமாக கையைக் காட்டி இங்கிருந்து ஒரு கூட்டம் வெளிப்படும். குர்ஆனை அவர்கள் நன்கு திறம்பட ஓதுவார்கள். அவர்களின் தொண்டைக் குழியை அது கடக்காது. ஈட்டியில் இருந்து அம்பு வெளியேறுவது போன்று அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிச் செல்வார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறினார்கள். (புகாரி)

இது பற்றி விளக்கமளிக்கும் இமாம்களான கத்தாபி, மற்றும் இப்னு ஹஜர் போன்ற அறிஞர்கள் இஸ்லாமிய சிந்தனைக்கு முரணான சிந்தனாரீதியான இயக்கங்களான, கவாரிஜ், மு∴தஸிலா, மற்றும் ஜஹ்மிய்யா, கத்ரிய்யா, ஷீஆ போன்ற நம்பிக்கை கோட்பாடுகளில் வழிதவறிய குழுக்களை அடையாளம் காட்டுவதைப் பாரக்கின்றோம். (பார்க்க: மஆலிமுஸ்ஸுன்ன, ∴பத்ஹுல் பாரி)

இந்த நபிமொழியின் அடிப்படையில் பார்க்கின்ற போது ஈராக் பிரதேசமானது குழப்பங்கள் அதிகமதிகம் நிறைந்து காணப்படுவதோடு, பல்வேறுபட்ட குழுக்களையும், வழிகேட்டு சிந்தனைகளையும் உள்ளடக்கிய ஒரு தேசமாக மறுமைவரை காணப்படும் என்பதும் இங்கு தெளிவாகின்றது. இதனைப் பின்வரும் ஹதீஸ்கள் உறுதி செய்கின்றன

ஈராக்கிலுள்ள 'யூப்பிரட்டீஸ்' நதியானது தங்க மலையை வெளிப்படுத்தும் நேரம் நெருங்கிவிட்டது. மக்கள் அது பற்றிக் கேள்விப்பட்டதும் அங்கு செல்வார்கள்.

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். ரிஷ்வான் –**

## சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு

4. நூலின் அமைப்பு

1 : 1-2 முன்னுரை
1 : 3 - 2:5 மற்ற நாடுகளின் மீது தீர்ப்பு
2 : 6 - 16 இஸ்ரயேலுக்கு எதிராக வழங்கப்படும் முதல் தீர்ப்பு
3 : 1 - 6 : 14 இஸ்ரயேலின் பாவங்கள்
7 : 1 - 9 : 10 ஆமோசின் காட்சி
9 : 11-14 மீட்பின் செய்தி.

வழக்கமாக மற்ற இறைவாக்கினர்கள் முதலில் இஸ்ரயேலைத் தாக்கிப் பேசுவார்கள். அதற்குப்பின்தான் மற்ற நாடுகளின் மேல் சாடுவார்கள். கு8220 நீங்கள் இஸ்ரயேல் மக்களைத் தாக்கியதால், கடவுள் உங்களைத் தண்டிக்கப்போகிறார் என்று கூறுவார்கள். ஆனால் ஆமோஸ் இவர்களிலிருந்து மாறுபட்டு இருக்கின்றார். ஆமோஸ் முதலில் மற்ற நாடுகளைத் திட்டுகிறார். பின் இஸ்ரயேல்நாட்டைப் பற்றிப் பேசுகிறார். இவருடைய எண்ணப்படி, இஸ்ரயேல் மக்கள் என்றோ, இஸ்ரயேல் அரசு என்றோ எவ்வித சலுகையும் கிடையாது என்று ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார். மேலும், ஆமோஸ் மற்ற நாடுகளைத் திட்டுவது, அவர்கள் இஸ்ரயேல் மக்கள் மேல் படையெடுத்து வந்ததற்காக அல்ல. யாவேக்கடவுளை மதிக்காததற்கல்ல, மாறாக அவர்கள் சமூகத்தின் அடிப்படை குணநலத்திலிருந்து, சமுதாய நீதியிலிருந்து மாறுபட்டிருப்பதால்தான்(




2 (அர8:12). யாவே எல்லோருக்கும் கடவுள் ஆகையால், படைப்புகளனைத்தையும் படைத்து, காத்து வருவதால் அவர்களைக் கண்டிக்கிறார்.

**5. ஆமோசின் போதனைகள்**

இறைவாக்கினர் ஆமோஸ், ஏற்கனவே நாம் கூறியது போல், நீதியின் இறைவாக்கினர். இஸ்ரயேல் மக்கள் எப்படி கடவுளின் அன்பை, கடவுளின் கட்டளையை மீறிப் பாவங்கள் செய்கின்றனர் என்று கூறுகிறார். இவர்களின் பாவச் செயல்களினால், நீதி எந்த அளவுக்குத் தாழ்ந்துவிட்டது என்று அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். அவர்களுடைய நீதிமன்றங்களில் நீதி நிலைநாட்டப்படுவதில்லை.

தொடரும் .. ..

www.bible.me

## குழந்தைகளுக்கு டயாபர்ஸ் உகந்ததா?

டிஸ்போசபிள் டயாபர்களின் மேலுறை, தண்ணீர் புகாத, பாலிபுரபலீன் என்ற ரசாயனத்தால் உருவாக்கப்பட்டது. பிளாஸ்டிக் வடிவத்திலான இந்த ரசாயனம், சிதைவடைய 500 ஆண்டுகாலம் தேவை. உலகில் தயாரிக்கப்படும் டயாபர்களில் 70 சதவீதம், காகிதங்களில் இருந்தே தயாரிக்கப்படுகிறது. இதனால், உலகளவில், ஆண்டுக்கு 100 கோடி மரங்கள் வெட்டப்படுகின்றன. ஒரு மரத்தை உருவாக்க, உரங்கள், பூச்சி மருந்துகள், தண்ணீர் என ஏராளமானவை தேவைப்-படுகிறது. டயாபர்கள் தயாரிப்பதற்காக, அதிகளவில் மரங்கள் வெட்டப்படுவது சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. துணி டயாபர்கள், சிதைவுற 100 ஆண்டுகளே ஆகின்றன. இதே போன்று, சுத்தம் செய்து, மீண்டும் பயன்படுத்தப்படும் டயாபர்களும் உள்ளன. இந்த டயாபர்கள் ஈரமானதும், அவற்றின் உள்ளே இருப்பவற்றை தூக்கி எறிந்து விட்டு, துவைத்த பின், மீண்டும் பயன்படுத்தலாம். முதல் குழந்தைக்கு பயன்படுத்திய, இந்த வகை டயாபர்களை, மீண்டும் இரண்டாவது குழந்தைக்கு பயன்படுத்துவதால், உலகம் வெப்பமயமாதல் 40 சதவீதம் குறையும் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. "ரீயூசபிள் டயாபர்"கள் சிதைவடைய, ஆறு மாத காலமே ஆகின்றன. "டிஸ்போசபிள்" டயாபர்களுக்கு மக்கள் ஏராளமான அளவில் பணம் செலவழிக்கின்றனர். ஆனால், "ரீயூசபிள் டயாபர்"கள், மீண்டும் பயன்படுத்தப்படுவதால், அதற்கான செலவு குறைகிறது. எனவே, "டிஸ்போசபிள்" டயாபர்களுடன் ஒப்பிடும் போது, "ரீயூசபிள்" டயாபர்களால் அதிகளவு பணம் சேமிக்கப்படுகிறது.








நண்பன் -1: "நம்ம தலைவருக்கு ரொம்பத்தான் குசும்பு"

நண்பன் -2: "ஏன்.. என்னாச்சு?"

நண்பன்-1: "கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலைய முடியலையாம்... கோர்ட்லயே ஒரு ரூம் வாடகைக்குக் கேக்கிறார்"



*மனைவி: "எங்க அம்மாவ ஸ்டேஷன் லேருந்து அழைச்சிக்கிட்டு வரச்சொன்னா ஏன் தயங்கறீங்க...?"*

*கணவன்: "உங்க அம்மா மட்டும்தான் வர்றாங்களா..?"*

*மனைவி: "ஏன்? மச்சினியும் கூட வந்தாத்தான் அழைக்கப்போவீங்களா?"*

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : நீண்ட நாள் முயற்சி கூட இனிதே நிறைவேறும். பண வரவு பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும்.



**ரிஷபம்** : வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். வாகனத்தின் பயன்பாட்டால் இனிமை காண்பீர்கள். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும்.



**மிதுனம்** : ஆரோக்கியம் மேம்படும். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் உண்டாகும்.



**கடகம்** : பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். பசு, பால் பாக்ய யோகத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும்.




**சிம்மம்**: மாறுபட்ட கருத்து உள்ளவர்களுடன் பேசுவதை தவிர்க்கவும். திடீர் செலவால் கடன் வாங்கும் சூழல் உண்டாகலாம். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.



**கன்னி** : பகைவர்களால் ஏற்பட்ட தொல்லை மறையும். குடும்ப வளர்ச்சிக்கான புதிய திட்டம் தீட்டுவீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்.



**துலாம்** : மனதில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலும், செயலிலும் நிதானம் வெளிப்படும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு தேவை. புத்திரரின் வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள்.



**விருச்சிகம்** : எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். புதியவர்களின் நட்பை பெறுவீர்கள். வாகன பயன்பாட்டால் நன்மை. அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு.



**தனுசு** : நற்செயலில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் புகழ் கிடைக்கும். முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். எதிரி தொல்லை மறையும்.



**மகரம்** : அன்றாட பணி அனைத்தும் குறித்த காலத்தில் நிறைவேறும். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். தொழிலில் வருமானத்தைப் பெருக்குவீர்கள்.



**கும்பம்** : இடையூறு செய்தவர் விலகிப் போகும் சூழல் உருவாகும். சுப வி'யத்தில் இருந்த தடை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும்.



**மீனம்** : பேச்சு, செயலில் நிதானத்தை கடைபிடிக்கவும். திடீர்ச் செலவு ஏற்படலாம். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும். வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. கட்டட வேலைகளின் போது மேற்பரப்பொன்றில் நேர்த்தன்மையைப் பரீட்சிப்பதற்கு பயன்டும் உபகரணம்
i. மணியாசு ii. சாந்தகப்பை iii. பரப்புப்பலகை iv. மட்டக்கம்பு

02. உளியின் பயன்பாட்டிற்குத் தேவையான ஓர் உபகரணம்?
i. ஆணி ii. பலகை iii. மரச்சுத்தியல் iv. வரைகம்பு

03. ஒரு வேளை உணவுக்குப் பொருத்தமான உணவுகளைக்கொண்ட உணவுத்தொகுதி
I. இறைச்சி, சோறு, கீரை, வாழைப்பழம்
ii. சோறு, மீன், இடியப்பம், பிட்டு
iii. சோயா, இறைச்சி, சோறு, மீன்
iv. குரக்கண், பலா, பாண், ஈரப்பலா

04.. விற்றமின் A குறைபாட்டினால் ஒருவருக்கு ஏற்படக்கூடிய நோய்
I. குருதிச்சோகை ii. மாலைக்கண்
iii. கண்டக்கழலை iv. எலும்புவளர்ச்சி குறைதல்

05. சர்வதேச கை கழுவல் தினம் அனுஷ்டிக்கப்படுவது?
I. அக்டோபர் - 15 ii. மே – 1 iii. மார்ச் - 13 iv. ஒக்டோபர் - 16

06. ஆடையில் பட்ட மைக்கறையை நீக்குவதற்குப் பொருத்தமானது
I. தேங்காய் எண்ணெய் ii. அற்றோன்
iii. மதுசாரம் iv. உப்புத்தூள்

07. அசுத்த நீரில் குளிப்பதால் ஏற்படக்கூடிய ஒரு நோய்
I. சளிக்காய்ச்சல் ii. எலிக்காய்ச்சல்
iii. நெருப்புக்காய்ச்சல் iv. மஞ்சட்காமாலை

08. இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையானதை குறிக்க அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம்?
i. தலதாமாளிகை ii. பாராளுமன்றம்
iii. சுதந்திர சதுக்கம் iv. வெள்ளரசு மரம்

09. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்?
i. சீகிரியா ii. சிலைமனை iii. அம்பக்க iv. யாப்பகூவ

10. தேசப்படங்களில் புகையிரதப் பாதையை குறிக்கும் நிறம்?
I. சிவப்பு ii. கறுப்பு iii. மஞ்சள் iv. நீலம்

11. புகையிரதம், சினிமா பற்றுச்சீட்டுக்களை முன்கூட்டிப் பதிவு செய்து கொள்ள அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்
i. 1199 ii. 1929 iii. 456 iv. 365

**பகுதி 02**

01. 6மென்பானம் 15 பேரிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்ட போது ஒருவருக்கு கிடைக்கும் பானத்தின் அளவு?

..............................................................................

02. அஷ்வின் வீட்டிலிருந்து அவன் தற்போது செல்லும் பாடசாலைக்குள்ள தூரம் 5km 900m ஆகும். அவன் 6ஆம் தரத்திற்காக செல்லவேண்டிய பாடசாலை பஸ் தரிப்பிடத்திலிருந்து 5mk 450m தூரத்திலும் வீட்டிலிருந்து பஸ் தரிப்பிடம் 650m தூரத்திலும் உள்ளது எனின் அஷ்வின் வீட்டிலிருந்து புதிய பாடசாலைக்கான தூரம் எவ்வளவு?

..............................................................................

03. ராஜா தனது பிரயாணத்தில் 3/5 துவிச்சக்கரவண்டியிலும் மிதித்தூரத்தை நடந்து சென்றான் அவன் நடந்து சென்ற தூரம் 24km எனின் அவன் பயணம் செய்ய வேண்டிய தூரம் எவ்வளவு?

..............................................................................

04.  நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக

..............................................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல் -குருபிரதீபா விருது பெற்ற ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

## சிறுவர் முரசு

### சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## ஏன் சண்டை போடுகிறீர்கள்?

ஒரு ஊரில் பெரிய கோயிலில் கோபுரத்தில் நிறைய புறாக்கள் வாழ்ந்து வந்தன, திடீரென்று கோயிலில் திருப்பணி நடந்தது அதனால் அங்கு வாழ்ந்த புறாக்கள் வேறு இடம் தேடி பறந்தன வழியில் ஒரு தேவாலயத்தை கண்டன அங்கு சில புறாக்கள் இருந்தன அவைகளோடு இந்த புறாக்களும் அங்கு குடியேறின.


சில நாட்கள் கழித்து கிறிஸ்துமஸ் வந்தது. தேவாலயம் புதுப்பிக்க தயாரானது இப்போது இங்கு இருந்து சென்ற பறவைகளும் அங்கு இருந்த பறவைகளும் வேறு இடம் தேடி பறந்தன .

வழியில் ஒரு மசூதியை கண்டது அங்கும் சில புறாக்கள் இருந்தன. அவைகளோடு இந்த புறாக்களும் குடியேறின சில நாட்கள் கழித்து ரமலான் வந்தது வழக்கம் போல் இடம் தேடி பறந்தன.

இப்போது மூன்று இடத்திலும் உள்ள புறாக்களும் கோயிலில் குடியேறின.
கீழே மனிதர்கள் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் வெட்டி சாய்த்துக்கொண்டு இருந்தனர். ஒரு குஞ்சுப்புறா தாய் புறாவிடம் கேட்டது "ஏன் இவர்கள் சண்டை போடுகிறார்கள் ?" என்று...


அதற்கு அந்த தாய் புறா சொன்னது "நாம் இங்கு இருந்த போதும் புறா தான், தேவாலயத்துக்கு போனபோதும் புறா தான், மசூதிக்கு போன போதும் புறா தான் ",
ஆனால் மனிதன் கோயிலுக்கு போனால் இந்து சர்ச்க்கு போனால் கிறிஸ்த்தவன் மசூதிக்கு போனால் முஸ்லிம் என்றது

குழம்பிய குட்டி புறா
அது எப்படி நாம் எங்கு போனாலும் புறா தானே அதுபோல தானே மனிதர்களும் என்றது.
அதற்கு தாய் புறா இது புரிந்ததனால் தான் நாம் மேலே இருக்கிறோம், இவர்கள் கீழே இருக்கிறார்கள் என்றது.



**எல்லோருடனும் ஒற்றுமையாக வாழ வேண்டும்**

**சிந்திக்க .. ..**
**மகான் போல் வாழ வேண்டும் என்பதில்லை: மனசாட்சிப்படி வாழ்ந்தாலே போதும்....**



### எடுப்பீர்.. ..

– தாமரைத்தீவான் –
(ஈச்சந்தீவு – கிண்ணியா)

அன்புக் குழந்தைகளே - தமிழின்
ஆர்வக் குழந்தைகளே,
இன்பக் குழந்தைகளே - உளத்தை
ஈர்க்கும் குழந்தைகளே!

தாயின் மணியிருந்தே - கண்டதும்
தந்தையின் தோளிருந்தே,
நோயில் இருக்காமல் - மெலிந்தே
நோஞ்சானாய்ப் போகாமல்,

ஓடி விளையாடி - காணாமல்
ஒளித்து விளையாடி,
ஆடிக்களைத்தே பால் - அருந்தி
அயர்ந்து கண் உறங்கி,

முன்பள்ளி செல்வதற்கு - முன்னமே
முதல் எழுத்ததனை - எழுதிட
எழுதுகோலெடுப்பீர்!



யாழ்மதி. கை
தரம் - 10



ஜெ.கவிஷாயினி
தரம் - 06,



வீ.ரஞ்சித்
தரம் - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

### பகுதி 02

01. ஒரு குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் 30 சேவையாளர்கள் இரு மாதங்களில் சேவைக்கு வந்த நாட்களின் எண்ணிக்கைகள் இடம் பெறும் தண்டு - இலை வரிப்படம் கீழே காட்டப்படுகின்றது.

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 9 |
| 1 | 8,9 |
| 2 | 3,3,5,6,6,7,7,8,9,9,9 |
| 3 | 6,6,7,7,7,7,8,8,8,8,8,8,9,9,9 |
| 4 | 0 |

(i) ஒரு சேவையாளர் சேவைக்கு வரும் நாட்களின் எண்ணிக்கையின் வீச்சையும் இடையத்தையும் காண்க.

(ii) மேற்குறித்த வரிப்படத்தைக் கொண்டு பின்வரும் அட்டனைணயைப் பூர்த்தி செய்க. (இங்கு 8-14 இனால் தொடை $\{x: 8 < x \leq 14\}$ முதலியன காட்டப்படுகின்றன).

| வகுப்பு ஆயிடை (நாட்களின் எண்ணிக்கை) | மீடிறன் (சேவையாளர்களின் எண்ணிக்கை) |
|---|---|
| 08 - 14 | |
| 14 - 20 | |
| 20 - 26 | |
| 26 - 32 | |
| 32 - 38 | |
| 38 -44 | |

(iii) அட்டவனையில் நடுப் பெறுமான நிரலைச் சேர்க்க.

## பாடம் : வரலாறு

01.கண்டி இராச்சியத்திலே போர்த்துகேயர் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு கையாண்ட தந்திரம்
(1) கோணப்பு பண்டாரனை அரசனாக்கியமை
(2) தங்கள் பாதுகாவலின் கீழ் குசுமாதேவிக்கு அரசபதவி வழங்கியமை
(3) கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியமை
(4) கண்டிப் பிரதானிகளின் உதவியை பெற்றுக் கொண்டமை

02. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை கி.பி 1815 இல் கைப்பற்றியமைக்கு சாதகமாக இருந்த காரணம் யாது?
(!) நாயக்க வம்சம் பிரதானிகளுக்கு பிரத்தியோகமான சிறப்புரிமைகளை வழங்கப்பட்டமை
(2) சிங்களப் பிரதானிகளின் சலுகைகள் ஒழிக்கப்பட்டமை
(3) கண்டி அரசனால் மனிதாபிமானமற்ற தண்டனைகள் வழங்கப்பட்டன.
(4) பிரதானிகளும் குடியானவர்களும் அரசன் மீது கொண்டிருந்த விசுவாசத்தை பலவீனப்படுத்தின.

03.அரசாங்கத்தினுடைய சட்டவாக்கமானது அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நீதிமன்றம்
(1) மஜிஸ்ரேற் நீதிமன்றம் (2) உச்ச நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நிதிமன்றம் (4) மேல் நீதிமன்றம்

04. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர் பின்வரும் எந்நாட்டில் படையெடுத்த போது தீர்க்கமான தோல்வி ஏற்பட்டது.
(1) ரூசியா (2) போலந்து (3) இங்கிலாந்து (4) பெல்ஜியம்

05. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் பற்றி தகவல்களை வெளிப்படுத்த தக்க மூலம் எது?
(1) பொறிப்பு (சாசனம்) (2) மகாவம்சம்
(3) கற்கருவிகள் (4) கட்டட சிதைவுகள்

## பாடம் :பௌதிகவியல்

01.பின்வருவனவற்றில் எது யூலில் அளவிடலாம்?
(A) விசை ஒன்றினால் செய்யப்பட்ட வேலை
(B) ஈர்வையிலான அழுத்தச் சக்தி
(c) விசை ஒன்றினது திருப்பம்
(1) A மாத்திரம் (2) A,B ஆகியவை மாத்திரம்
(3) A,B,C ஆகிய எல்லாம் (4) A,C ஆகியவை மாத்திரம்

02. புற விசை தாக்காவிட்டால் பொருள் ஒன்று ஓய்விலிருக்கும் அல்லது நேர்கோடு வழியே சீரான வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் என்பதை நியூட்டனின் எவ்விதி குறிப்பிடுகின்றது.
(1) 1ம் விதி (2) 2ம் விதி (3) 3ம் விதி (4) 1ம், 3ம் விதி

03. 100 கிராம் செம்பின் வெப்பநிலையை $40^{\circ}C$ இலிருந்து $50^{\circ}C$ ஆக உயர்த்துவதற்கு தேவையான வெப்ப அளவைக் கணிப்பதற்கு தேவைப்படும் மேலதிக தரவு எது?
(1) செம்பின் உருகு நிலை (2) செம்பின் அடர்த்தி
(3) செம்பின் தன் வெப்பக் கொள்ளளவு
(4) செம்பின் உருகலின் மறை வெப்பம்

04. ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு இக் கூற்று எவ்வாறு கூறப்படும்?
(1) சக்திக்காப்பு கோட்பாடு
(2) நியூற்றனின் 1ம் இயக்க விதி
(3) நியூற்றனின் 2ம் இயக்க விதி
(4) நியூற்றனின் 3ம் இயக்க விதி

05. சூரிய சக்தி புவியை அடையும் பொறிமுறை யாது?
(1) கடத்தல் (2) கதிர்ப்பு
(3) உடன்காவுகை (4) கடத்தல்,கதிர்ப்பு மூலம்

06. அழுத்தச்சக்தி இயக்கச்சக்தியாக மாறும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
(1) மாமரத்தில் உள்ள மாம்பழம் கீழே விழுதல்
(2) முறுக்கி விடப்பட்ட விளையாட்டுக் கார் இயங்குதல்
(3) கிணற்றிலிருந்து நீரை அள்ளுதல்
(4) மலையுச்சியிலிருந்து பாறை கீழே புரளுதல்.

07. இசைக்கருவி தொடர்பான கூற்றுக்களில் தவறானது
(1) இசைக் கருவிகளில் வளிநிரல் நீளம் கூட சுருதி குறையும்
(2) இசைக் கருவிகளின் இழுவையைக் கூட்டும் போது சுருதி கூடும்
(3) இழைகளைப் பலமாகத் தட்டும் போது உரப்பு கூடிய ஒலி உருவாகும்.
(4) இழைகளின் தடிப்புக் கூடும் போது சுருதி அதிகரிக்கும்.

08. ஒளியின் சிறப்பியல்புகளில் அலை வடிவத்தில் தங்கியிருப்பது?
(1) சுருதி (2) உரப்பு (3) பண்பு (4) உரப்பும், பண்பும்

09. குவிவாடியின் பயன்பாடு
(1) வாகன பக்கக் கண்ணாடி (2) முகச்சவரம் செய்ய
(3) வாகன முப்பக்க ஆடி (4) எறியி தொலை காட்டி

10. ஒளியின் உரப்பை அளக்கும் அலகு எது?
(1) லம்டா (2) டெசிபல் (3) ஹேர்ஸ் (4) மீடிறன்

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பல்தேர்வு**

ஆசிரியர் . பொன்னுத்துரை தவசீதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம் **இலக்கணத் தொடர்**

### பழமொழிகள்

5. **ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு**
கணக்கிட்டு செலவு செய்ய வேண்டும்.

6. **இருந்தால் மூதேவி நடந்தால் சீதேவி**
முயற்சி உடையாரை திருமகள் தேடி வருவாள்.

7. **கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டாம்**
நேரே காணக்கூடிய பொருளுக்கு கண்ணாடி தேவையில்லை.

8. **உப்பிட்டவரை உள்ளளவும் நினை**
உதவி செய்தாரை எக்காலமும் மறக்கக்கூடாது.

9. **ஈனரை அடுத்தால் மானங்கெடவரும்**
கீழோர் உறவு அவமானத்தை உண்டாக்கும்.

10. **சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் வரைய வேண்டும்.**
உடலைப் பேணி உயிரைக்காக்க வேண்டும்.

11. **தீராக் கோபம் போராய் முடியும்**
கோபம் சண்டைக்கு வழிதேடும்

12. **துள்ளிய மாடு பொதி சுமக்கும்**
அடக்கம் இல்லாதவர் அவதி அடைவார்.

13. **இளமையிற் கல்வி சிலையில் எழுத்து**
இளமைக்காலமே கல்வி கற்பதற்கு ஏற்றது

14. **பிச்சை புகினும் கற்பனை கல்**
எத்தகைய துன்பம் வந்த காலத்திலும் கல்வியை விடாத தொடர வேண்டும்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,

## Grammar

***Fill in the blanks in the following text using the words given in the box.***

Long, ago, on a Saturday I walked towards the harbor which was not far from my home. the harbor was veery (1)............... it was just after (2)............. and the mist was (3)............ A few fishermen were (4)............. their nets patiently. I (5)............... jim who was (6)............. near his boat. I (7).............. over to him and (8).............. what he was doing. (9)............... we became friends. (10)............... invited me to go (11)............... to sea. I was (12)............... it was on that (13) my love of the (14)............... began. I be came a sailor and I have been one ever since.

| sitting , out , quiet , sea , delighted , saw , sunrise , he , day , soon went , asked , disappearing , sea |
|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சமூகம்....

வெய்யிலிலும், மழையிலும் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அவர்கள் கேட்பது நியாயமற்ற கோரிக்கைகள் அல்ல என்பதை முதலில் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாண சபையால் தீர்மானிக்கப்பட்டதன் படி இனவிகிதாசார முறையில் நியமனம் வழங்கிய போது தமிழப் பட்டதாரிகளான இவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். பின்னர் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான கிழக்கு மாகாணப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் அப் பரீட்சைக்கு அம்பாரை மாவட்டத்தில் இருந்து தமிழ்ப் பட்டதாரிகள் தோற்ற முடியாது எனக் கூறப்பட்டு அப் பரீட்சைகளில் இருந்தும் புறக்கணிக்கப்பட்டனர்.

எனவே இவ்வகையான புறக்கணிப்புக்களை அவர்கள் எதிர்கொள்வது மிகவும் கவலையானது. அம்பாரை மாவட்டத் தழிழர்கள் அரசியல் ஏதிலிகள் ஆக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் தொடரும் இப் போராட்டத்தை கிழக்கு மாகாணத் தமிழ்ச் சமூகமே வேடிக்கை பார்ப்பது போன்றதொரு தோற்றப்பாடே இன்று காணப்படுகின்றது.

பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பட்டதாரிகளுக்கு உணவு ஏற்பாடுகளைச் செய்து தரவா? என்றொரு மாகாணசபை முஸ்லிம் பிரமுகர் கேட்டிருப்பது அப்பட்டதாரிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவே.

இன்று அம்பாரை மாவட்டத் தமிழருக்கு நடந்துள்ள இக் கொடுமை கிழக்கு முழுவதும் நடைபெறும் வாய்ப்புள்ளது. இன்று உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இந்த நிலைமைதான் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்றது. எனவே திருகோண மலை மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து அமைப்புக்களும் இப் போராட்டத்திற்கு தமது தார்மீக ஆதரவை வழங்க வேண்டும் என இரா.ஸ்ரீஞானேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்கலைக்கழக மாணவர் சங்கம்,

## விஞ்ஞான....

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் கல்வி பொதுத்தரா தர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பின் தங்கிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விஞ்ஞான கையேடானது, பாடப் புத்தகத்தை முழுமையாகப் பிரதி செய்யப்பட்டு வழங்கப்பட்டிருப்பதோடு மாணவர்களைப் பரீட்சைக்கு முன் ஆயத்தம் செய்வதற்கான பண்புசார் தரத்தைக் கொண்டு காணப்படவில்லை.

விஞ்ஞான கையேடு மாணவர்களுக்கான செயல்முறை பயிற்சிகள் எதுவுமின்றி மனப்பாடம் செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டிருப்பதோடு கல்வித் திட்ட மறுசீரமைப்பின் தேசிய விஞ்ஞான பரீட்சைக்கான இலக்கினைக் கொண்டு காணப்படவில்லை.

இரசாயனப் பகுதியானது கட்டமைப்பு வினா மற்றும் கட்டுரை வினாக்களுக்கான பண்புகள் தரத்தைக் கொண்டு காணப்படவில்லை பாடம் மனனம் செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டிருப்பது தேசிய கலவிக் கொள்கையின் இலக்கிற்கு முரணானது என்றும் அந்தக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

## அம்பாரைப்...

ஆளுனரைச் சந்திப்பதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளின் போது கிழக்கின் ஆளுனர் வெளிநாட்டுப் பயணத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து எதிர்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடும் முயற்சியும் ஆயரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


## விநியோகிப்பவர்கள் தேவை

பத்திரிகையையும், சஞ்சிகையையும் உங்களது பிரதேசத்தில் வீடு வீடாக விநியோகிப்பவர்கள் தேவை!

எமது வாடிக்கையாளர்களுக்குக் கொண்டு சென்று வழங்குவது மட்டுமே உங்கள் பணி

குறைந்த நேரத்தில் கூடிய தரகு வருமானம் உழைக்கலாம்

0777 555 738


## 5மாத அவ...

இந்த இனவிகிதாசார அடிப்படையினால் கடுமையான புறக்கணிப்பிற்கு உள்ளாகியுள்ள அம்பாரை மாவட்டப் பட்டதாரிகள் கடந்த பத்து நாட்களாக கிழக்கு மாகாண சபைக்கு முன்பாகப் பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பட்டதாரிகள் பட்டினிப் போரை முன்னெடுத்தனர்.

அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகிய பலரிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதும் அவற்றிற்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதாலேயே கிழக்கின் தமிழ்ப் பட்டதாரிகள் இப்போராட்டங்களை முன்னெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அம்பாரைப் பட்டதாரிகளின் போராட்டமானது தாம் நியமனங்களின் போதும் பொதுப் பரீட்சையின் போதும் திட்டமிட்டே புறக்கணிக்கப் பட்டிருந்தோம் என்பதை முன்நிலைப் படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

நேற்று (09) மட்டு போராட்டத் திடலுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் கிழக்கு மாகாணசபையும் மத்திய அரசிலும் சில நிர்வாக சிக்கல்கள் உள்ளதன் காரணமாக அவற்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் ஒன்றியத்தின் செயலாளர் பொன்.லதாகரன், முதலமைச்சரின் கோரிக்கையினை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி முதலமைச்சரை வந்து சந்திப்பதற்கான அனுமதியை தரவேண்டும் எனவும். அன்றைய தினம் தங்களுக்கான உறுதிமொழிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மாச் மாதம் 31ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் நியமனம் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் கிழக்கு மாகாணசபையினை முற்றுகையிட்டு போராடவேண்டிய நிலையேற்படும் எனவும், தற்போது தமது உண்ணாவிரத போராட்டத்தினை தற்காலிகமாக நிறுத்துவதாக தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண சபையானது பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதன்படி தகுதி வாய்ந்த வட மாகாணப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

## மேலுமொரு.....

போதே அக்கப்பலின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருந்தது.

அவன்கார்ட் கம்பனிக்குச் சொந்தமான அக்கப்பலில் பெருந்தொகை ஆயுதங்கள் இருப்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் வெளியாகியுள்ளது.

அத்துடன் கப்பல் மாலுமிகள் சமர்ப்பித்த ஆவணங்கள் சில குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும், கப்பல் கைப்பற்றப்பட்ட போது உக்ரேனியர் ஒருவரே அதற்குப் பொறுப்பாக இருந்ததாகவும், ஆனால் ஆவணங்களில் இலங்கையர் ஒருவரே கப்டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கப்பலில் உள்ளவர்களைக் கைது செய்யும் அதிகாரம் தமக்கில்லை எனத் தெரிவித்துள்ள கடற்படைப் பேச்சாளர் கைது நடவடிக்கை தொடர்பாக இலங்கையின் கடலோரக் காவல்துறைத் திணைக்களமே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

கப்பல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பூர்வாங்க விசாரணையின் மூலம் கிடைத்த தகவல்கள் மற்றும் விசாரணையின் மூலம் கண்டறியப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாக காணப்பட்டதால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக கடற்படை தளபதி சுட்டிக்காட்டினார்.

## குற்றவாளிகள்.....

இவரைக் கைது செய்வதற்கு புதிய அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

கடந்த காலத்தில் பாரிய மோசடிகளுடன் தொடர்புபட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் சொகுசாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்

## தமிழ் அகதிகள்...

ஆபத்தான படகுகள் மூலம் புகலிடம் கோரி அவுஸ்திரேலியா சென்ற ஸ்ரீலங்கா, ஈராக் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகள் நவுறு, பப்புவா நியூ கினி போன்ற தீவுகளில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

குறித்த முகாம்களிலுள்ள அகதிகளை கம்போடியாவிற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்த போதிலும் அது சாத்தியமளித்திருக்கவில்லை.

இந்த நிலையில் அகதிகளில் சிலரை பிலிப்பைன்ஸ் நாட்டில் தங்கவைப்பது தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுக்களை முன்னெடுத்து வருவதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டட்டொன் தெரிவித்துள்ளார்.

எனினும் பரஸ்பர நன்மையளிக்கும் ஒப்பந்தத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அவுஸ்திரேலியாவின் இந்த முயற்சிகளை அந்நாட்டு பிரதான கட்சிகள் எதிர்க்காத போதிலும், சில அமைப்புகள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிபந்தனைகளையும், கெடுபிடிகளையும் தளர்த்திக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றன.

# சம்பூரில் அமைச்சர் தண்டாயுதபாணி

சம்பூர் மீள்குடியேற்ற பிரதேசங்களை கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் நேற்று (9) பார்வையிட்டுள்ளார்.

திருகோணமலை சம்பூர் பிரதேச மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் முகமாக கிழக்கு மாகாண அரச திணைக்களங்களைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுடன், சம்பூர் மீள்குடியேற்ற பிரதேசங்களினை கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் பார்வையிட்டார்.

இதன்போது, மீள்குடியேற்றத்திற்காக மக்களுக்கு தேவையானவற்றினை பகுப்பாய்வு செய்தனர்.

தற்போது சம்பூர் பிரதேசத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய தொண்டு நிறுவனத்தினால் 210 வீடுகள் கட்டப்படவுள்ளதாகவும் மற்றும் 50 வீடுகள் ஏஆர்ஆர் எனும் தொண்டு நிறுவனத்தினால் கட்டப்படவுள்ளதாகவும்,

இப்பிரதேச கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் குடிநீர் மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் மீள்குடியேற்ற மக்களுள் அரச ஊழியர்களும் உள்ளடங்குவதனால் அவர்களுக்கான உதவிகள் கிடைக்கப்பெறாமையினால் மேற்குறிப்பிட்ட குடும்பத்தினை சேர்ந்தவர்கள் பல இன்னல்களை சந்திப்பதாக இதன்போது தெரிவித்தனர்.

# 02 நாட்கள் விவாதம்

ஜெனா விவகாரத்தை விவாதிப்பதற்கு இரண்டு நாட்களை ஒதுக்குவதாக நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் அறிவித்துள்ளார்.

சனாதிபதி ஆணைக்குழுக்களான பரணகம மற்றும் உதலகம ஆகியவற்றின் அறிக்கைகளையும் விவாதிப்பது தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

பனி மூடிய நிலை. சிலவேளை விலகி உண்மை புரியலாம். சிலவேளை விலகாமல் அப்படியேயும் இருக்கலாம். இன்றும் அப்படியான பனி விலகாத அன்றைய சம்பவங்கள் ஏராளமாக கொட்டிக் கிடக்கின்றன. காரண காரியங்கள் எதுவுமே இன்றுவரை தெளிவுபடுத்தப் படவில்லை.

இந்த பனிப்போர் நிலையை ஓரளவு புரிந்து கொள்ள நீங்கள் இலங்கை ஜக்கிய ஜனநாயக சோஷலிச குடியரசில் நடைமுறையில் இருந்ததாகச் சொல்லப்பட்ட 2002-2008 வரையான சமாதான காலப்பகுதியை எடுத்துக் கொள்ளலாம். அடுத்து என்ன என்ற கேள்வி, முடிவு என்ன என்ற ஏக்கம் இவை எல்லாம் இருந்ததை உணர்ந்திருப்பீர்கள். வாயால் சிரித்துக் கொண்டு நெஞ்சில் குத்துவது, உள்ளே கிண்டி விட்டு துரோகங்களை உருவாக்குவது, உருவாக்கியவர்களை வைத்து முதுகில் குத்துவது இப்படியெல்லாம் இருந்தது தானே? அப்படி ஒரு நிலைதான் அந்த பனிப்போர் நிலை. பனிப்போர்நிலையின் முக்கிய அச்சாணி, அல்லது முதுகெலும்பாக இருந்ததும், இருப்பதும் சம்பந்தப்பட்ட தரப்பின் புலனாய்வு அமைப்புகளும், அவர்களது இரகசிய நடவடிக்கைகளும்தான். புலனாய்வு அமைப்புகளின் வெற்றி தோல்வியே அந்தந்த நாடுகளின் வெற்றி தோல்வியாகி நிற்கும்.

சரி இதற்கு முன், சில புரியாத, தேவையற்ற விடயங்கள் சிலவற்றை நாம் பார்த்து, புரிந்து கொண்டே ஆகவேண்டும். புதிதா ஒன்றும் இல்லை, எல்லாம் அடிக்கடி கேட்டு பழகி புளிச்சுப்போன புரியாத விடயங்கள். சேமவுடமை (socialism), பொதுவுடைமை (Communism), மார்க்சிசம் (marxism), லெனினிசம் (leninism), நாசிசம்(nazism), பாசிசம்(fascism), முதலாளித்துவம் (capitalism), இப்படி கனக்க ஊருப்பட்ட "இசங்கள்" கிடக்கின்றன. வேணுமென்றால் நீங்களும் ஒன்றை உருவாக்கிவிட்டுப் போகலாம்.

இப்படியும் உங்களைக் குழப்புவார்கள், இடது சாரி, வலது சாரி, பட்டுச்சாரி, போயில் சாரி என்றெல்லாம் குழப்புவார்கள். இவை எல்லாம் செத்துப் போய் கன நாளாகிவிட்டது. இப்படியான பெயர்களில் ஏதாவது கட்சிகள் இருந்தால் கூட, அந்த கட்சி தலைவரின் வீட்டை ஒருதரம் பார்த்தீர்கள் என்றால் போதும். அனைத்தும் புரியும் உங்களுக்கு, அவர்கள் எந்த சாரி? என்று .

ஆனால் ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன் "தனிப்பட்ட ஒருவரின் கருத்து அல்லது சித்தாந்தமே, காலப்போக்கில் அதனை உலகம் பின்பற்றி நிற்கும்" இதுதான் உண்மை. இந்த உலகில் இன்று தோற்றுப்போய், எதற்கும் பிரயோசனமில்லாத, வியாபாரமாகிப் போயுள்ள அனைத்து சமயம், மதங்களின் புனித நூல்கள் என்று சொல்லப் படுபவை கூட, தனிமனித சித்தாந்தத்தில் இருந்து எழுந்தவைதான் என்பது உங்கள் மனங்களால் ஏற்றுக் கொள்ளப் பட முடியாத உண்மை.

கடந்த தமிழரின் போராட்டம், அது ஒட்டுமொத்த தமிழரின் பிரச்சனையாக இருந்தாலும் கூட, நீதியான, தூய்மையான, நேர்மையான, தியாகமுள்ள ஒருவரின் தனிப்பட்ட சித்தாந்தத்திலேயே அந்த போராட்டம் கொண்டு நடத்தப் பட்டது. அதுவே தமிழரின் பொது சித்தாந்தமாக மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை - தமிழர் ஒன்றுபட்டு நின்றாலே தவிர. இதையும் கவனத்தில் கொள்க.

மேலே குறிப்பிட்ட சித்தாந்தங்களின் பெயர்கள் வேறாக இருந்தாலும் சில ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவைதான். உங்களுக்கு நாசிசம் என்பது மட்டும் உடன் புரிந்து கொள்ளலாம். ஹிட்லரின் நாசிக்கட்சி நினைவுக்குவர, தமது இனமே உலகை ஆளப் பிறந்தது என்ற எண்ணம் கொண்டு சர்வாதிகாரப் போக்குடன் செய்யப்பட்ட ஒரு ஆட்சி வடிவம். இந்த நாசிக் கொள்கை எங்குமே நிலைத்து இருந்ததில்லை.

இதனோடு தொடர்புடைய மற்றைய சித்தாந்தம் "பாசிசம்". இதுவும் ஒரு ஆட்சி முறைதான். ஒரு இடத்தில் குவியச் செய்யப்பட்ட அதிகாரங்களை கொண்டு ஆளுவது. பண்டைய ரோம் நகரில் தோன்றி வளர்ந்து மறைந்த ஆட்சி முறை. பண்டைய ரோம் நகர நீதிமன்றத்தில் தண்டனைக்காக உருட்டுக் கட்டைகளின் கோர்வையில் ஒரு கோடரி சொருகப் பட்டிருக்கும். அது Fascio என்று அழைக்கப்பட்டது. அந்த ஆயுதத்தின் பெயர்.




# நிகழ்வுகள்

## மகுடம் வெளியீடு

## வண்ண வண்ண பூக்கள்

கொலின்

மகுடம் வெளியீடான கவிஞர் செல்லிதாசனின் "வண்ண வண்ணப் பூக்கள்" சிறுவர் பாடல் நூல் வெளியீடும். மட்டக்களப்பின் இளங்கலைஞன் அமரர் வரதராஜன் இளஞ் செழியன் நினைவுப் பகிர்வும் கடந்த ஞாயிறு மாலை நான்கு மணிக்கு மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மட்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அமரர் வரதராஜனின் பெற்றோர், தலைமையுரை ஆற்றிய கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா வரவேற்புரை ஆற்றிய மகுடம் ஆசிரியர் வி. மைக்கல் கொலின், சிறப்புரையாற்றும் பிரதம அதிதி முன்னாள் மட்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொல்லியல் ஆய்வாளருமான செல்வி.தங்கேஸ்வரி கதிராமன். நூல் நயவுரை நல்கிய கிழக்குப் பல்கலைக் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ரூபி வலண்டீனா பிரான்சிஸ். ஏற்புரை ஆற்றிய கவிஞர் செல்லிதாசன் ஆகியோரும் இன்னும் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வின்போது அமரர் வரதராஜன் இளஞ்செழியன் அவர்கள் குறித்தும் அவர்களின் சேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வண்ண வண்ண பூக்கள் எனும் நூலின் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டதுடன் பார்வையாளர்களுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# "புரவலர்ச்செம்மல்" பட்டமளிப்பு விழா

கட்டைபறிச்சான் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் பரிவார சபை, திருவாளர் கோ.இரத்தினசிங்கம் அவர்களுக்கு "புரவலர்ச்செம்மல்" எனும் கவுரவப்பட்டத்தை 2015,செப்டம்பர் மாதம் 25ம் திகதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் கும்பாபிசேகம் அன்று வழங்கி கவுரவித்தனர். கோயில் பரிபாரசபை தலைவர் திரு.முத்துராசா அவர்கள் "எங்கெல்லாம் தமது சேவையினை ஆற்ற முடியுமோ அங்கெல்லாம் தனது உழைப்பினை நல்கியுள்ளார். அத்துடன் சந்தனவெட்டை என்னும் கிராமத்தில் சிவாலயம் அமைத்து அதற்கு சிறப்பாக கும்பாபிசேகத்தை கடந்த ஆண்டு மிகச்சிறப்பாக நடத்தினார். அத்தோடு மூதூர் பிரதேசத்தில் தொன்மையானதும் பாடப்பட்ட திருத்தலமாகிய கங்குவேலி சிவாலயத்தை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்" என தெரிவித்தார்.

அதன்பின் கோயில் பரிபார சபை அங்கத்தவர் திரு.சந்திரலிங்கம் அவர்கள் திரு.கோ.இரத்தினசிங்கம் அவர்களுக்கு மாலை அணிவித்து சிறப்பிக்க செயளாளர் திரு.வர்ணகுலசிங்கம் அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இதனை தொடர்ந்து கல்வியாளர் "சைவப்புலவர்" திரு.விபுனசேகரம் அவர்கள் புரவலர்ச்செம்மல் எனும் கொளரவ பட்டத்தை வழங்கி வாழ்த்து பா ஒன்றினை பாடி சிறப்பித்தார்.



# சம்பூரில் நூல் வெளியீட்டு விழா – 12.10.2015

– சேனையூர் நிருபர் –

வைத்திய கலாநிதி சம்பூர் அ.ஸதீஸ்குமார் எழுதிய **சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய வரலாறும், மகிமையும்** என்ற நூலின் வெளியீட்டு விழா 12.10.2015 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றலில் கவிஞர் க.யோகாநந்தன் தலைமையில் இடம்பெற உள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும், கௌரவ விருந்தினராக திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நடராசா பிரதீபனும், கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர்களான திருமலை நவம், கனகசபை தேவகடாட்சம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

நூலின் முதற் பிரதியை சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் பெற்றுக்கொள்வதுடன், நூலின் அறிமுக உரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் சரா. புவனேஸ்வரன் வழங்க, நயவுரையினை சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபர்.இரா.இரத்தினசிங்கம் வழங்குவார்.

ஆசியுரையினை சைவப்புலவர் அ.குகராசாவும், வரவேற்புரையினை துறை.கிருபைராஜ அவர்களும் நிகழ்த்துவார்கள்.

# நூல் வெளியீட்டு விழா – தம்பலகாமம்

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் தம்பலகாமத்தில் இரு நூலகள் வெளியிடப் படவுள்ளன. க.வேலாயுதம் அவர்-களின் வையமெல்லாம் தமிழோசை வளர்ந்தோங்கும் மற்றும் போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள் எனும் இரு நூல்களே வெளியிடப்படவுள்ளன.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டாளர்கள். இவ்விழாவில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

## உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

சேனையூர் நிருபர்


அன்புவழிபுரம் சதா சகாயமாதா ஆலய புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் திருவிழாவை முன்னிட்டு அன்பு விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி 03.10.2015 அன்று காலை ஆரம்பமானது நிகழ்வில் அன்பு ஏ அணியினரும் ஒலிம்பிக்ஸ் சொக்குமாஸ்டர் அணியினரும் போட்டியிட்டனர். இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மற்றும் சதா சகாயமாதா ஆலய பங்குத்தந்தை மற்றும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



## குண்டெறிதல் போட்டியில் திருமலைக்கு முதலிடம்

### ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன்

கதிரவன்



அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. இப்போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (12.10.2015) வரை தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறவுள்ளது.

நடைபெற்ற 21 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் திருகோணமலை **ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் அமிர்தகுலசிங்கம் கோகுலன் முதலிடம்** பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். இவர் 2013ம் வருடம் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் மூன்றாம் இடத்தையும், 2014ம் வருடம் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பந்து பொறுக்கியவருடன் மோதிய நடால்

கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை 14 முறை வென்றவரும் களிமண் ஆடுகளத்தின் முடிசூடா மன்னனுமான ரபேல் நடால் சமீப காலமாக திணறி வருகிறார். விம்பிள்டன் மற்றும் அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அரையிறுதி வரைக்கூட அவரால் முன்னேற முடியவில்லை. இந்நிலையில் சீனாவில் நடைபெற்றுவரும் சீன ஓப்பன் டெனிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் நடால் 230வது இடத்தில் இருக்கும் சீனாவின் வு டி யை எதிர்கொண்டார். இதில் நடால் 6 4, 64 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்றார். 24 வயதாகும் வு டி வேறு யாருமில்லை. ஷாங்காயில் நடைபெற்ற மாஸ்டர் டெனிஸ் போட்டியில் நடாலுக்கு பந்து எடுத்துக் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக இந்திய ஜாம்பவான் சச்சின், அவுஸ்திரேலிய முன்னாள் சுழல் ஜாம்பவான் வோர்ன் உள்ளிட்டோர் பங்கேற்கும் போட்டிகள் நடக்கின்றன. இந்தப் போட்டியில் கங்குலி, லட்சுமண், வாசிம் அக்ரம், பிரையன் லாரா, கலிஸ், சங்ககார உள்ளிட்ட பல வீரர்கள் விளையாடுகின்றனர். இந்தக் கண்காட்சி அனைத்து நாடுகளிலும் கிரிக்கட்டை கொண்டு செல்ல ஏதுவாக அமையும் என தெரிவித்துள்ளார் சச்சின்.



## விராட்டும், ரெய்னாவுமே காரணம்

விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா ஆகியோரின் ஆட்டத்தை பார்த்து தனது திறமையை வளர்த்துக் கொண்டதாக பாகிஸ்தானின் கிரிக்கெட் வீராங்கனை பிஸ்மா மரூப் தெரிவித்துள்ளார்.

இடது கை துடுப்பாட்ட வீராங்கனையாக விளங்கும் பிஸ்மா மரூப் பாகிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணியில் கடந்த 2006ம் ஆண்டில் அறிமுகமானார். தொடர்ந்து விளையாடி வரும் அவர், தற்போது வங்கதேசத்திற்கு எதிராக டி20 தொடரில் 109 ஓட்டங்களும், ஒருநாள் தொடரில் 133 ஓட்டங்களும் எடுத்தார். இந்த தொடரில் தொடர்ச்சியாக மூன்று ஆட்ட நாயகி விருது பெற்று அசத்தியமை குறிப்பிடத்தக்கது.



## றக்பியில் பி.ஜி வெற்றி

றக்பி உலகக் கிண்ணப் போட்டிகளில், றோமானிய, கனடா அணிகளுக்கிடையிலான போட்டி, மிகுந்த சுவாரசியமானதாக அமைந்ததோடு, றோமானிய அணிக்கு வெற்றியை வழங்குவதாகவும் அமைந்தது. இடம்பெற்ற மற்றைய போட்டியில், உருகுவே அணியை எதிர்கொண்ட பிஜி, இலகுவான வெற்றியைப் பெற்றது.

றோமானிய, கனட அணிகளுக்கிடையிலான போட்டியில், ஆரம்பத்திலிருந்து ஆதிக்கத்தை வெளிப்படுத்திய கனடா அணி, இருப்பினும் மூன்றாம் பாதியில் ஆதிக்கத்தை வெளிப்படுத்திய பிஜி அணி, 47-15 என்ற புள்ளிகள் கணக்கில் இப்போட்டியில் இலகுவாக வெற்றிபெற்றது.

## இலங்கையில் கிரிக்கட் சுற்றுப்போட்டி

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது.



இந்நிலையில் இப்போட்டி தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்ற போது மெத்தியூஸ் மற்றும் ஜேசன் ஹோல்டர் ஆகியோரின் கருத்துக்கள்.

நாங்கள் இருபது-20 போட்டி குறித்து முதலில் கவனம் செலுத்த மாட்டோம். மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக முதலில் டெஸ்ட் தொடரே ஆரம்பமாகின்றது. எனவே இப்போட்டியை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே எங்களது முக்கியமாக கவனமாக இருக்கும். இதனையடுத்தே இருபது-20 போட்டி மீதான கவனம் செலுத்தப்படும் என இலங்கை அணியின் தலைவர் ஏஞ்சலோ மெத்தியூஸ் தெரிவித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணியை பொறுத்த வரையில் இளம் வீரர்களை கொண்டு களமிறங்க உள்ளோம். எமது அணி ஒற்றுமையுடன் செயற்படும். நான் அணித் தலைராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து முன்னாள் வீரர் பிரைன் லாரா மற்றும் ஏனைய சிரேஷ்ட வீரர்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர் என ஜேசன் ஹோல்டர் தெரிவித்தார்.

## டோனியை திட்டித் தீர்க்கும் ரசிகர்கள்



தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 3வது மற்றும் கடைசி டி20 போட்டியில் விளையாட டோனி தலைமையிலான இந்திய அணி கொல்கத்தாவுக்கு சென்றது.

அப்போது டோனி வித்தியாசமான ஹேர்ஸ்டைல் வைத்திருந்தார்.

இதை பார்த்த ரசிகர்கள் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரை இழந்த நிலையில், இது எல்லாம் தேவையா என்று கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## இடம்பிடித்தார் மாலிக்



பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் 13ம் திகதி அபுதாபியில் தொடங்குகிறது. இந்த தொடருக்காக கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் மாலிக் இடம்பெறவில்லை. மாலிக் சிறந்த பார்மில் இருப்பதால் அணியில் சேர்க்குமாறு அணி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தது.

இதைத் தொடர்ந்து விளையாடவுள்ள பாகிஸ்தான் அணியில் 16வது வீரராக மாலிக் இடம்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் நாட்டைவிட்டுத் தப்பியோடி விட்டனர் - சம்பந்தன்




கடந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை உட்பட பல்வேறு மோசமான குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்த நபர் யார் என்ற தகவலை கடந்த அரசாங்கத்துக்கு பெயர் விபரங்களுடன் வழங்கிய போதும் அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று வெளிநாட்டில் வசித்து வருகிறார். 17

# மீண்டுமொரு மிதக்கும் ஆயுதக் கப்பல்



மீண்டுமொரு ஆயுதக் கப்பல் கைப்பற்றப் - பட்டுள்ள விவகாரம் பூதாகரமதாக வெடிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

கடந்த வாரம் காலி துறைமுகப் பரப்பினுள் இலங்கைக் கொடியுடன் பயணித்த கப்பலொன்று சந்தேகத்திற்கிடமானதாகக் காணப்பட்டதை அடுத்து அக்கப்பலைக் கைப்பற்றும் ஆணை இலங்கை அரசால் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கைக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் பயணித்த மேற்படி கப்பலைக் கடற்படையினர் பெரும் முயற்சியின் பின்னர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அவ்வாறு கடற்படை பெரும் அர்ப்பணிப்புடன் அக்கப்பலைக் கைப்பற்றிய

# கிழக்கு தமிழ் இலக்கிய வித்தகர்கள் தெரிவு

**அச்சுதன்**

2015ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா இம்முறை திருகோணமலையில் இடம்பெற உள்ளது. இவ்வாண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவில் "வித்தகர் விருதுக்கு" தெரிவு செய்யப்பட்ட கலை இலக்கியவாதிகளின் பெயர்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவலகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் விக்கிரமாரச்சி உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட கலை இலக்கிய வாதிகளின் விபரம் வருமாறு

01. ஜனாப். ஐதுரூஸ் அப்துல் அசன் (கலை இலக்கியம்) - கிண்ணியா
02. அருணாசலம் பரசுராமன் (சமய இலக்கியம்) - திருகோணமலை
03. ஜனாபா. மஜீட் நூன் றாகிலா உம்மா (கலை இலக்கியம்) - முள்ளிப்பொத்தானை
04. சி. நடராஜா துரைராஜா (இலக்கியம்) - திருகோணமலை
05. சின்னத்தம்பி ராமநாதன் (நாட்டுக்கூத்து) - காரைதீவு
06. ஜனாப் . முகமது அபூபக்கர் முகம்மதா ஜெலீல் (இலக்கியம்) - மருதமுனை
07. ஜனாப் . மீரா சாஹிபு முஹமட் ,ஸ்மாயில் (கலை இலக்கியம்) - அக்கரைப்பற்று
08. திருமதி. ,ராஜகுமாரி சிதம்பரம் (நடனம்) - திருக்கோவில்
09. சாமித்தம்பி தில்லைநாதன் (இலக்கியம்) - மட்டக்களப்பு
10. மாசிலாமணி திருநாவுக்கரசு (பல்துறை) - மட்டக்களப்பு
11. கார்த்திகேசு சிவலிங்கம் (ஆக்க இலக்கியம்) - மட்டக்களப்பு
12. சின்னத்தம்பி தங்கராசா (கிராமிய கலை) - மட்டக்களப்பு

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சிறு விளம்பரங்கள்

### வினியோகத்தர்கள் தேவை

பத்திரிகையையும், சஞ்சிகையையும் உங்களது பிரதேசத்தில் வீடு வீடாக வினியோகிப்பவர்கள் தேவை! பகுதி நேர வேலை. கவர்ச்சிகரமான தரகினை உழைக்க முடியும் தொடர்பு - 026 222 76 77 - 077 157 8792

### அச்சு இயந்திர இயக்குனர் தேவை

திருகோணமலையில் பல்வர்ண KORD ஓவ்செற் அச்சு இயந்திரத்தினை அயக்கும் அனுபவமுள்ள இயந்திர இயக்குனர் தேவை. தொடர்பு 0777 555 738

# 2016 ஜனவரியில் பல்கலைக் கழகங்களில் கல்வி

2014 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழங்களுக்கு தெரிவாகியுள்ள அனைத்து பீட மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உயர்தரப் பரீட்சைக்கு 2,47376 பேர் தோற்றியிருந்ததுடன். அவர்களில் 24,343 பேர் சாதாரண அனுமதியின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசத்தைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் தமிழர்கள்? தமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் அவர்கள் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் தமது விடுதலை உணர்வை அரசியல் அறிவாக மாற்ற வேண்டும் .......

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

# அன்னதானத் துரந்தர் விருது பெற்றார் வல்லிபுரம் தங்கவேல்

திருகோணமலையில் கடந்த நாற்பது வருடங்களாக அன்னதானப் பணியை திறம்பட முன்னெடுத்துவரும் திருக்கோணேஸ்வர அன்னதான சபைத் தலைவர் திரு. வல்லிபுரம் தங்கவேல் அவர்கள் அன்னதானத் துரந்தர் என்ற கௌரவப் பட்டம் வழங்கிப் பாராட்டப் பட்டுள்ளார்.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகளின் வருடாந்தத் திருவிழாவின் போதே இவ்விருதும் தங்கப்பதக்கமும் அவருக்கு வழங்கப்பட்டன.

வெருகலம்பதி ஆலய நிர்வாக சபையினர் வழங்கிய இப்பட்டத்துடன் திருக்கோணேஸ்வர அன்னதான சபையின் செயலாளர் சி.ஜெயசங்கர் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கோவில்களில் மக்களின் பங்களிப்புடன் இடையறாத 40 வருட அன்னதான சேவையை இவர்கள் ஆற்றிவருகின்றனர்.

# புலமைப்பரிசில் வெற்றியாளர்



திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி தனுக்ஷனா
184 புள்ளிகள்



மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் பாடசாலையின் தக்ஷினியா
193 புள்ளிகள்




இவ்வாரத்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 10.10.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org